[illegible]

V2 . No. 11 14 March 1929

JL
ഞ2॥, ﾘ128ﾑഗ ✓
N29.2.11.
189046

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 8 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 வரு மார்ச்சு மீ 14உ [No. 11.

OFFICE OF THE RE... ...19 MADRA

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	201
2.	அப்பர் — E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	203
3.	ஏமாங்கதத் திளவரசன் (A Novel) — T. N. சேஷாசலம் B. A.,B. L	206
4.	வில்லி பாரத விளக்கம் — T. S. நடராஜப் பிள்ளை B.A., B.L.	210
5.	சிலப்பதிகாரமும் மணிமேகலையும் — P. இராமாநுஜன்	212
6.	தமிழ்ப் பாடம்	213
7.	கம்பராமாயணம் — T. N. சேஷாசலம் B.A., B.L.	215
8.	வர்த்தமானம்	219

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் சலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்

கலைகளே கதி.

IV

ற்றோர் எவரும் கயவராயிருக்க இயலாதென்பதைச்
சென்ற வாரம் கூறினோம். கலாசாலைப் பட்டங்
ளும் பாஷையறிவும் ஒருவனையும் கல்வியின் வைப்
பன்று கருதுதற்கு ஏற்றவனாக்குவதில்லை. ஆனால்
சன்றவாரத் தலையங்கத்தின் முடிவில் "காவியங்களை
ம் நாடோறும் மேன்மேலும் இன்பம் பெருக ஓதிக்
காண்டே இருப்பவரைத்தாம் கல்வியுடையார்
ன்று கூறலாமே யல்லாது, கற்றுய்விட்டதெனப்
த்தகங்களை மூடிவிட்டால், அன்றுமுதல் அவர்கள்
ல்வியில்லாதவர்களே ஆகின்றார்கள்" என்று நாம்
றியிருப்பதற் கிணங்கக் 'கற்றோர்' என இறந்த
லத்து உருவத்தால் குறிக்கப்படுபவர் நெறியின்
றஞ் செல்பவரா யிருப்பினு மிருக்கலாம். கற்கின்
ர் அல்லது கற்பவர் எனச் சொல்வதற்குரியவர் எங்
ளும் எவ்வித வசைக்கும் பாத்திரராகார் என்பது
ண்ணம். ஆனால் ஒன்று: அறிவுநூல் தெரிவுநூல்
வைநூல் தொழில்நூல் பல்வித ஆராய்ச்சிநூல்
ள் கற்பவர்திறத்தில் நாம் பணயம்வைக்க இயைய
ட்டோம். அன்னார் வேறு பலகாரணங்களால் நல்ல
ராயிருப்பினும் இருக்கலாம், நல்லவரல்லராயமை
னும் அமையலாம். மற்று, நாம் முன் "கலாநிலயம்
சய்யுங் கருமமும் செயல்வகையும்" என்று சென்ற
ரண்டு முதலில் எழுதிய தலையங்கங்களில் விளக்கி
யுள்ளபடி கலைகளிற் பயில்வோரையே கற்பவர் என்ற
சிறப்புப்பொருளில் கருதினாலன்றி எம் கொள்கை
யின் பொருத்தம் தெரிந்திடாது. இந்தச் சந்தர்ப்
பத்தில், அயோத்திமாநகரத்தின் அமைதியையும்
வாழ்க்கைப் பெருமையையும் உரைப்பவராகிய கம்
பர்,

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லா ரல்லாரு மில்லை

என்று எடுத்துக்காட்டியதையும், இவ்வடிகளுக்கு ஸ்ரீமாந் T. N. சேஷாசலம் தமது கம்பராமாயணக் கட்டுரையில் (I. வால். பக்கம் 313),

"கற்றவர் கல்லாதார் என்னும் பாகுபாடு அயோத்தியில் வகுக்க இயலாது. எல்லாரும் எப்பொழுதும் கற்றுக்கொண்டே யிருக்க, யாரைத்தான் "கற்றவர்" என்று சொல்வது? அவ்விதமே கற்றுக்கொண்டே யாவரும் வருவாராகக் 'கல்லாதவர்' என எவரைச் சுட்டிக் காட்ட இயலும்? கல்வி கரையிலவாதலால் முற்றியகல்வியர் முயற்கொம்பனையவர். கற்றுவருபவரும் கல்லாதாராகார். ஆதலின் யாவருக்கும் கருத்தனைத்தும் எந்நாளும் எப்போதும் கவர்ந்திருப்பது கல்வியே என்றபின்........"

என விரிவுரை வரைந்திருப்பதையும் கருத்துட்

கொண்டு இவ்விஷயங்களை ஆராய்ந்தறிதல் நலமாம். ஆராய்ந்து, நாம் குறிக்கும் பொருளில் கலையில் பழகிக் கொண்டிருப்பவர் “தினைத்தேனும் நடத்தையில் நேர் மையிலராய்” வாழ்கின்றனரோ என்று அவரவர் அனுபவத்தைச் செலுத்திச் சோதித்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு சோதிக்கும்போது இரண்டொருவர்திறத்தில் நமது கொள்கை தவறியது போல்தோன்றலாம். ஆயிரவரிலொருவர் கலைகளைப் பயில்பவரா யிருப்பவர்மாட்டும் நேரியவன்றெனக் கருதத்தக்க சில நடத்தைகளைக் காண நேரிடலாம் என்பதை மறுக்க இயலாது. ஆயினும், இன்னவகையினரைப்பற்றி நாம் மதிக்கும்போது இரண்டொரு விஷயங்களை நினைவில் வைத்துக்கொள்ளல் வேண்டும்: எந்த விதிக்கும் புறநடை யுண்டு. அப்புறநடையைக் கண்டமாத்திரத்தில் பொதுவிதி பொய்த்துவிட்டது என எண்ணல் நேரிதன்று. அதுவன்றி, கலைகளில் பயில்வோரிடத்து நாம் காண்கின்ற குற்றங் குறைகளையும், அவை பயிலாதார்மாட்டுக் காண்கின்ற குற்றங்களையும் ஒப்புநோக்கித் தன்மையாலும் அளவாலும் விஞ்சுவன எவர் குற்றமும் குறையுமென்பதை ஓர்தல் வேண்டும். கலைப்பயிற்சியுடையோர் மாசற்ற தூய்மையால் பெரிதும் உத்தமராயிருத்தல் வேண்டுமென நாம் எதிர்ப்பார்க்கின்றோமாகையால், ஏனையோர்பால் இருப்பினுந் தோன்றாத குற்றம் சில இவர்பால் உண்டோ இல்லையோ எனச் சிறிதிருப்பினும் அது மிகப் பெரியதாய் விளங்கி ஊறிய வசையுண்ணல் இயற்கையே. மற்று அக்கலைஞன்மாட்டுக் கண்ட பிழை பெரிதேயா யிருக்குங் காலையினும், “அக்கலையுணர்வும் பயிற்சியும் இடையே அடையாக்கால், அவன் மனோவாக்குக் காயங்களில் இன்னு மெவ்வளவு கொடியவனாய் இருப்பனோ” என உன்னி நாம் மனந்தேறுவதும் முறையேயாம்.

இத்துணைச் சமாதானங்கள் நாம் காட்டுவது எவ்வாற்றானும் எமது கொள்கையை நிலைநாட்டியே தீர வேண்டும் என்னுமொரு பரிவினாலன்று. இதுபற்றி ஆராயவேண்டிய நெறிகள்யாவும் பின்பற்றிச்சென்று, ஆங்காங்கு எதிர்ப்படும் பொருள்களுக்கு மெய்ப்பொருள் காணமுயன்று, அதன்முடிவாய் ஆழ அமர்ந்து யோசித்து எய்திய துணிபை இங்குக் கூறுகின்றோமேயல்லாது மேனோக்காக நோக்குவோர்க்கு அவ்வப்போது தென்படும் பொருள்களைத் தென்படுகின்றவாறே எழுதிப்போக்க இசைந்திலேம் என்பதைத் தெரிவிக்குமாறே அவைகளைச் சொல்லிக்காட்டியவர்களாவோம்.

“கலையிற் பழகித் தினைத்தேனும் நடத்தையில் நேர்மையிலரே! அதன் காரணம் என்னவோ!” என்று வினவிய நம் நண்பருக்கு, நாம் கூறியவண்ணம், கல்வி யுடையவரெனத் தகுந்தவர்தம் பாகுபாடும் அன்னார் இலக்கணமும் ஏற்றுக்கொள்ளத் தகுந்தனவாயிருக்குமென நினைக்கின்றோம். இனிக், ‘கலையறியாதாரிற் பலரே (பாமரர்) நிலைகுலையாது வதிகின்றனரென நாடோறும் உணர்தற்கியல்கின்றது” என அவர் இந்நாள் உலகம் இருக்கும் வகையை நன்கு நோக்கிக் கூறிய வாசகத்தை ஆராய்வோம். அவர் கூறுவது முற்றிலும் உண்மை. “கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்” என்று முறையிடும்படி கற்றவர்கள் தம்மைக் காட்டிக்கொண்ட விதம் தாயுமான சுவாமிகள் காலத்திலும் உலகறியக் கிடந்தது. தாயுமானவர் குறிப்பது வெல்லாமலெவரையும் மருட்டிவிட வகை தந்த வித்தையாம். இக்காலம், அவ்வித்தை நிறைந்திருப்பதுடன் கலாசாலை மாணவராயிருக்கின்றவர் யாவருக்கும் அவ்வித்தையினோடு கொல்லாமலெவரையும் தின்றுவிடுகின்ற வித்தைகளைப் போதிக்கின்றார்களென்றால், கல்லாத பாமரர் தம் நிலைகுலையாதிருத்தல் ஆச்சரியமன்று. இப்பாடசாலைகளில் கற்றுத் தேர்ந்தவராயபின்னும் சிலர் நல்லவர்களாயிருப்பதே பெரிதும் ஆச்சரியத்திற்கிடமா யிருக்கின்றது. பள்ளியிற்போய் உட்கார்ந்து முதற்பாடப் புத்தகம் கையில் கொடுத்தநாள் முதல், “பிள்ளாய், நீ படித்துப் பணம் சம்பாதிப்பதற்கு எது வழியோ அதனிலேயே கண்ணுங் கருத்துமாயிரு. எல்லாரையும் பின் தள்ளித்தள்ளி நீ முன்னே போகவேண்டும். ஒருவரும் உனக்கு முன்னே போகாமல் பார்த்துக் கொள்” என்று நாடோறும் நிமிடந்தோறும் வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் பொதுக் கூட்டங்களிலும் சட்ட சபைகளிலும் ஓயாது அவனுக்கு “முன்னுக்கு வருகின்ற” நினைவையே ஊட்டிவளர்த்தால் அவன் நிலைகுலையாது யாதுசெய்வான்! போதிக்கின்ற ஆசிரியர்களும் பெரும்பான்மை அத்தொழிலைத் தாங்கள் பணம் சம்பாதிப்பதற்கு ஒரு வழியாக வைத்து விவகரிக்கின்றனர்களே யல்லாமல் தாம் இன்புற்றதைப் பிறர் இன்புற அளிக்கவேண்டும் என்னும் அவாவினால் ஆசிரியராய் அமைந்தவர் அல்லர். ஆதலின் வழக்கென்றும் வர்த்தகமென்றும் கைத்தொழிலென்றும் பெயர்வைத்துப் பிறர்கைப் பொருளெல்லாம் தன்கை வரவேண்டும் என்று பொல்லாத் தவங்கிடக்கக் கற்பிக்கும் இக்கலாசாலைகளில் பயின்றார்தம்மில் கல்லாதாரே நல்லோராயிருத்தல் வியப்பாமோ. இத்தகைய கலாசாலைகளின் பட்டங்களைப் பெற்றபின்னும் இரண்டொருவர் தர்மசிந்தனையும் தெய்வபக்தியு முடையராய்ப் பாவச்செயல்களுக்குஅஞ்சிவாழ்கின்றாரெனின், அது அன்னார் பூர்வஜன்ம வாசனையாலேனும் பரம்பரை உணர்வினாலேனும் இவையனைய வேறுசில காரணங்களாலேனும் ஆயவென்பதற் கையமில்லை.பொறை அறிவு துறவு ஈதலாதிய நற்குணங்கள் மானுடர்க்கு இயற்கையாம். வேறு சில புகுந்து அவைகளைக் கெடுக்காதவரையில் அவை மனிதராய்ப் பிறந்தோர் யாவர் மாட்டும் காணப்பெறும். இவ்விலோகதயக் கல்வி கலையென்ற போலி வேடத்தோடு உட்புகுந்து பாமரர்களுடைய உள்ளத்தைக் கெடுத்ததில்லை. ஆதலால் இந்நாட் கலாசாலைகளின் பயிற்சியும் அதனிற் கற்றவர்கள்தம் உறவும் அதிகம் இல்லாத ‘பாமரர்’, பெரும்பான்மை யோக்கியர்களா யிருக்கின்றனர்.

எனவே, பாமரரிற் பலர் நன்னீர்மையுடையராயிருப்பதையும், கற்றாரிற் பலர் நற்குண நற்செய்கைகள் இல்லாதவராய் இருப்பதையும் எதிரெதிர் நோக்கி, முன்னையோர் கலையின் பயிற்சியின்மையால் நல்லராயிருக்கின்றனர் என்றேனும், பின்னவர் அஃதிருப்பதால் அல்லராயினா ரென்றேனும் எண்ணவொண்ணாது. ஒருவகையில் கருதினால், “அறிதோறும் அறியாமை கண்டற்று” எனத் திருவள்ளுவா தம் பொய்யாமொழிக் கிணங்க யாவரையும் பாமரராய்த் தம்மைக் கருதும்படி செய்கின்ற கல்வியே நாம் கலையின்பயிற்சி என்று கொண்டாடுவதற்கு ஒத்ததாம். இக்காலப் படிப்போ ஒன்றுமறியாமுன் யாவும் அறிந்துவிட்டதாகச் செருக்கச் செய்கின்றன

OFFICE OF THE ... 1929 MADRAS

அப்பர்

3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

3. தஞ்சாவூர் ஜில்லாத் தலயாத்திரை

190 பக்கத் தொடர்ச்சி

திருநாகேச்சரத்தினின்று பழையாறு என்னுந் தலத்திற்குச் சென்று அதன் பின்னர்த் திருச்சத்திமுற்றம் சேர்ந்தனர் அப்பர் என்பது பெரியபுராண வரலாறு. இப்பழையாறு “செறிவிரை நன்மலர்ச்சோலைப் பழையாறு” என்பதால் ஒரு சிறந்த ஊர் என்று எண்ணல் வேண்டும். ஆயினும், இது * “பழையாறை” என்னும் திருப்பதியா, அல்லது வேறு ஸ்தலமா என்பதைத் தீர்மானிக்கக் கூடவில்லை. இப்பதியில் பாடல்கள் பாடியதாகச் சேக்கிழாரும் சொல்லவில்லை. திருமுறைகளிலும் ஒன்றும் அகப்படவுமில்லை.

† திருச்சத்திமுற்றத்தில் பல தமிழ் மாலைகள் அப்பர் சாத்தினார் என்று சேக்கிழார் கூறினும், நமக்கு இக்காலத்தில் ஒரு திருவிருத்தப்பதிகமே (‘கோவாய் முடுகி’என்பது) கிடைத்தது. இப்பதிகம் பாடியகாலை அப்பரைச் சிவபிரான் நல்லூருக்கு வாவென்று அருள் செய்தனர் என்று புராணம் கூறும். இப்பதிகத்தில் ‡ அப்பர் குழவிப் பருவத்திலிருந்து சிவபக்தராயிருந்தமையும், வழி தப்பிச் சமணடைந்ததும், மீண்டமுறையும் குறிப்பிடப்பட்டன. இத்தலத்தில் “பூவாரடிச் சுவடென்மேற் பொறி” என்ற கோரிக்கையை ஈடேற்றுவேன் என்று சிவபிரான் அழைக்க, அப்பர் திருநல்லூருக்குச் சென்று பெற்ற அநுபவத்தைத் திருநல்லூர்த் திருத்தாண்டகத்திற் காண்க $.திருநல்லூரில் 11- பாசுரங்களடங்கிய ஒரு திருத்தாண்டகப் பதிகமும் 11 கட்டளைக்கலித்துறைக ளமைந்த ஒரு திருவிருத்தப் பதிகமும் திருமுறைகளில் உள. அவற்றில் ஒன்று அமர்நீதி நாயனாரைப் பரிசோதித்த திருவிளையாடலுரைக்கும்†. அக்காலத்தில் இது நல்லூராய் மிகவும் அலங்காரமாய் விளங்கிய தென்பதற்கு அத்தாட்சிகள் உள *.

திருநல்லூரில் திருத்தொண்டுகள் செய்யுநாளில் † திருக்கருகாவூர், ‡ “திருவாரூர் $ திருப்பாலைத்துறை” முதலிய ஸ்தலங்களுக்குச் செல்வதும் மறுபடியும் திருநல்லூருக்கு மீள்வதுமாய் அப்பர் சில காலம் கழித்தனராம். திருக்கருகாவூரில் “கண்ணுங் கருகாவூ ரெந்தைதானே” என்னும் முடிவு பெற்ற திருத்தாண்டகப்பதிகம் ஒன்று பாடினார்.திருப்பாலைத்துறையில் பாடிய திருக்குறுந்தொகை ஒன்றே இவர் திருமுறைகளில் உள்ளது. திருவாரூரில் இவர் பாடிய பதிகங்களில் இக்காலத்தில் பாடியது இதுதான் என்று நிச்சயிக்கக்கூடிய ஆதரவுகள் நமக்குக் கிடைக்கவில்லை. திருவாவூர்ப் பசுபதீச்சரத்தில் சம்பந்தர் பதிகமொன்றே திருமுறையிலுள்ளது.

திருநல்லூரிலிருந்து தெற்கே தஞ்சாவூர்ச்சேர்க்கைக்குச் சற்று வடகிழக்காய் $8\frac{1}{2}$ மைலில் உள்ள திருப்பழனம் என்னும் திருப்பதிக்கு அப்பர் சென்றனர். அதைச்சுற்றிலுமுள்ளசிவாலயங்களுள்ள திருப்பதிகள் பல தரிசித்து அப்பூதி நாயனாரால் கீர்த்திபெற்ற திங்களூர் ¶ அடைந்தார். அவ்விடத்தி லவ்வடிகள் செய்த தண்ணீர்ப்பந்தர்,குளம்முதலியனமாத்திரமன்றிச்சர்வ

* இப்பதியைப்பற்றிப் பின்னால் கூறுவோம்.

† தாரேச்சுரம் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே இரண்டு மைலில் உள்ளது.

‡ (i) கருவுற்றிருந்துன் கழலே நினைந்தேன் கருப்புவியில்
தெருவிற் புகுந்தேன் றிகைத்தடி யேனைத் திகைப்பொழிவி
உருவிற் றிகழு முமையாள் கணவா விடிற்கெடுவேன்
திருவிற் பொலிசத்தி முற்றத் துறையும் சிவக்கொழுந்தே 5
[புகுந்தேன்

(ii) தக்கார்வ மெய்தீச் சமண்டவிர்ந் துன்றன் சரண்
எக்காதல் எப்பயன் உன்திறமல்லால் எனக் குளதே?
மிக்கார் தில்லையுள் விருப்பா மிகவட மேருவென்னும்
திக்கா திருச்சத்தி முற்றத் துறையும் சிவக்கொழுந்தே (9)

$ சுந்தரப்பெருமான் கோயில் ஸ்டேஷனிலிருந்து தெற்கே மட்சாலை மார்க்கமாய் 2 மைலில் திருநல்லூர் இருக்கின்றது. இஃது அமர்நீதி நாயனாரை ஆட்கொண்ட பதி.

உற்றுலவு பிணியுலகத் தெழுமை வைத்தா
ருயிர்வைத்தா ருயிர்செல்லும் கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம்வைத்தார் அமரர் காண
மறைவைத்தார் குறைமதியம் வளர வைத்தார்
செற்றமலி யார்வமொடு காம லோபம்
சிறவாத நெறிவைத்தார் துறவி வைத்தார்
நற்றவர்சேர் திருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.
—திருநல்லூர் - திருத்தாண்டகம் 5.

† திருநல்லூர்—திருவிருத்தம் 7-வது பாசுரம்

* “கோல நீண்மணி மாடத்திருநல்லூர்”—சேக்கிழார்

மன்னிய மாமறை யோர்மகிழ்ந் தேத்த மருவியெங்கும்
துன்னியதொண்டர்க ளின்னிசைபாடித்தொழுதுநல்லூர்க்
கன்னியர் தாமும் கனவிடை யுன்னிய காதலரை
அன்னிய ரற்றவ ரங்கண னேயரு ணல்கென்பரே. 9

திருவமர் தாமரை சீர்வளம் செங்கழு நீர்கொணெய்தல்
குருவமர் கோங்கங் குராமகிழ் சண்பகம் கொன்றைவன்னி
மருவமர் நீள்கொடி மாட மலிமறை யோர்கணல்லூர்
உருவமர் பாகத் துமையவன் பாகனை யுள்குதுமே. 10
திருநல்லூர்—திருவிருத்தம்.

†பாபவிநாசம்ஸ்டேஷனிலிருந்து தெற்கே சாலியமங்கலம் கற்சாலையில் 4மைலில் திருக்கருகாவூர் காணப்படும்;

‡ “திருவாரூர்” என்பது “திருவாவூர்” என்பதற்கான தற்செயலான பிழையென்று எண்ணுகிறேன். திருவாரூரைப் பற்றிச் சேக்கிழார் பின்னால் கூறுகின்றார். இதன்றியும் திருவாரூர்திருநல்லூருக்குச் சமீபமான ஸ்தலமன்று. திருக்கருகாவூரிலிருந்து வடகிழக்கே 4 மைலில் திருவாவூர் இருக்கின்றது. திருவாவூர்ப் பசுபதீச்சரம் சம்பந்தரால் பாடப்பெற்றது. இதில் அப்பரும் பாடியிருக்கலாம். அறிஞர் ஆராய்க. திருவாரூர் என்பதற்குத் “திரு அமைந்த ஊர்” என்னும் பொருளும் பொருந்தும்.

$ பாபவிநாசம் ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கே ஒரு மைலில் உள்ளது.

¶ இது வைப்பு ஸ்தலம். “ஒன்று கொலாம்” என்னும் பாடலில் திங்களூரை நோக்கிப் பாடாமை என்ன காரணமோ?—அப்பூதியடிகள் சரித்திரத்தில் “புறமனை முன்றிற் பாங்கோர் புடையினின் மறைத்து” வைத்த “ஆவிநீர் சவத்தை நோக்கியண்ணலாங்கருளும்வண்ணம், பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிட மாற்றி வைத்தார்” என்று சேக்கிழார் கூறுகின்றார். ஆதலால், இரு விதமான கர்ண பரம்பரைச்சரித்திரங்களில் ஒன்று திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும் மற்றொன்று அப்பூதியடிகள் புராணத்திலும் ஏண்டிருக்கின்றனவென்று நாம் அனுமானிக்கலாகும்.

சுவதந்திரப்பொருள்களுடிருதிணைப்பொருளும்திருநாவுக்கரசென்னும் நாமம்பெற்றிருக்கக்கண்டுஅப்பூதி நாயனரைக் காணும் விருப்பினராய் அவர் திருமாளிகைக்குச் சென்றனர். அப்பூதியடிகள் இவரைக் கண்டவுடன் தம்தவப்பயன் வாய்த்ததென்று சோடசோபசாரம்செய்து திருவமுதளிக்க யாவும் சரிவரச்செய்து தம் மகனாகிய மூத்த திருநாவுக்கரசை வாழையிலை ஒன்று அறுத்துக் கொண்டுவா என்று சொல்லி அனுப்பினர். அச்சிறுவன் வாழையிலை அறுக்கும்போது ஒருநாகம் கடித்தது. விஷம் தலைக் கேறுவதன் முன்னர்த் தாயிடம் ஓடி இலையைக் கொடுத்துத் தன்னைப் பாம்பு கடித்ததென்று சொல்லிக் கீழேவிழுந்து மாண்டனன். இதுகண்ட தாய் தந்தையர், "அந்தோ! நாம் கெட்டொழிந்தோமே! பரிசுத்தரான அப்பர் அமுது செய்யாரே! என் செய்வோம்?" என்று எண்ணித் தம் புதல்வன் சவமறைத்து அப்பருக்கு அமுதுகொடுக்க முயன்றனர். உள்ளத் தடுமாற்றத்தை அப்பர் அறிந்து சவத்தைக் கோயில்முன் கொண்டுவரச்செய்து'ஒன்று கொலா'மென்னும் திருப்பதிகம் பாடவும் அப்பிள்ளை உயிர்பெற்றெழுந்தான். பிறகு யாவரும் மகிழ்ந்து அப்பூதிநாயனரில்லத்தில் விருந்துசெய்து களித்தனர்.

அப்பர் திங்களூரில் அப்பூதியடிகளுடன் சில நாளிருந்து திருப்பழனம்சென்று இவ்வடிகள்பக்தியைச் சிறப்பித்துத் தமிழ் மாலை பாடினர். திருப்பழனத்திற்கு அருகிலுள்ள திருச்சோற்றுத்துறை முதலியன தரிசித்துப் பல பதிகங்கள் பாடித் திருபழனக்கோயிலில் திருத்தொண்டு செய்து வந்தனர். திருப்பழனத்தில் அப்பர் பாடிய பதிகங்கள் ஐந்து! * அப்பூதி நாயனரைப் புகழ்ந்து பாடிய "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்" என்னும் சந்த விருத்தம், ஈசுவர தத்துவத்தை† விளக்கும். திருநேரிசைப்பதிகம்,"என்னைக் குறிக்கொண்டருளுவ தென்னும்" திருவிருத்தம், ‡ சன்மார்க்கம் காட்டும் திருக்குறுந்தொகையொன்று, இயற்கை ஆங்காங்கே சிவமாகி நின்ற தன்மையைக் காட்டும் திருத்தாண்டகம் ஒன்று, ஆக ஐந்துமாம். திருச்சோற்றுத் துறையில் பாடியவை (1) திருநேரிசைப் பதிகம். இதில் $ சூரியநமஸ்காரம் சிவபக்தர்களுக்கு வேண்டாவென்கின்றார் (2) திருவிருத்தம்: இதில் எம்பிரானுக்கு அழகெனக் கொள்ளப்பட்டவை எவையென்பதை வகுத்துக் காட்டுகிறார்.(3) திருக்குறுந்தொகை: இது நெஞ்சுக்குப் புத்தி ¶ கூறுவது (4) "திகழொளியே சிவனேயுன் னபய நானே" என்று பாடிய திருத்தாண்டகம் ஆக நான்கு பதிகங்களாம். இத்தகைய பதிகங்கள் பாடிப் பலநாள் திருப்பழனத்திலிருந்து கோயிற்றிருப்பணிசெய்து பின்னர் அப்பர் திருநல்லூருக்கு மீண்டனர். "நல்லூர்நம்பர்" அருள்பெற்று*ப் பழையாறை மார்க்கமாய் வலஞ்சுழி சென்று * பதிகங்கள் பாடினர். இங்ஙனம் திருவாரூருக்குச் செல்லும் மார்க்கத்தில் 1 திருக்குடமூக்கு, 2 திருநாலூர், 3 தென்திருச்சேறை, 4 திருக்குடவாயல், 5 திருநறையூர், 6 தென் திருவாஞ்சியம், 7 பெருவேளூர் முதலிய திருப்பதிகளில் பதிகம் பாடினர் என்று பெரியபுராணம் கூறும்.

இவற்றுள் பழையாறையில் இச்சமயத்தில் பாடிய பாடல் ஒன்றும் கிடைக்கவில்லை. திருக்குடமூக்குத்திருக்குறுந்தொகை ஒரே பதிகம் உண்டு. திருநாலூரில் அப்பர் பாடிய பதிகமும் திருமுறைகளிலில்லை. திருச்சேறையில் ஒரு திருநேரிசைப் பதிகமும், ஒரு திருக்குறுந்தொகையும் உள. இத்திருநேரிசை தமக்கும் தமக்கு முன்னர் அடி வணங்கிய விண்ணோருக்கும் மண்ணோருக்கும் அருளிய சிவபெருமான் அற்புதங்களை விளக்கும். திருக்குறுந்தொகையில்தாம்சிவனையடைக்கலம் புகுந்த :$ செல்வத்தை வியந்து பாடிய சிவனடியார்களுக்கு இயற்கைப் பொருள்களாலும், மனிதர் செய்கையாலும் யா

* வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே!
—திருப்பழனம்-பண்-தக்காரகம்.

† நீரவன் தீயி னோடு நிழலவ னெழில தாய
பாரவன் விண்ணின் மிக்க பரமவன் பரம யோகி
ஆரவ னண்ட மிக்க திசையினோ டொளிக ளாகும்
பாரகத் தமிர்த மானார் பழனத்தெம் பரம னாரே
—திருப்பழனம் - திருநேரிசை 4.

‡ மார்க்க மொன்றறி யார்மதி யில்லிகள்
பூக்க ரத்திற் புரிகிலா மூடர்கள்
பார்க்க கின்ற பரவும் பழனத்தான்
தாட்க ணின்ற தலைவனைக் கார்களே
—திருப்பழனம் - திருக்குறுந்தொகை 7.

$ அங்கதி ரோனவனை யண்ணலாக் கருத வேண்டா
வெங்கதி ரோன்வழியே போவதற் கமைந்துகொண்மின்
அங்கதி ரோனவனை யுடன்வைத்த வாதி மூர்த்தி
செங்கதி ரோன்வணங்கும் திருச்சோற்றுத் துறைய னாரே
—திருச்சோற்றுத்துறை - திருநேரிசை 8,

¶ முத்தி யாக வொருதவம் செய்திலை
அத்தி யாலடி யார்க்கொன் றளித்திலை
தொத்து நின்றலர் சோற்றுத் துறையர்க்கே
பத்தி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே
—திருக்குறுந்தொகை (திருச்சோற்றுத்துறை)

* தாரேச்சுரம் ஸ்டேஷனிலிருந்து சுமார் இரண்டுமைலில் தெற்கே ஆற்றுக்குத்தென்கரையில் திருப்பழையாறை என்னும் திருப்பதி யுளது.

†இப்பதியின் திருக்குறுந்தொகையைப்பற்றிப் பின்னர்க் காண்க. இது கும்பகோணம் ஸ்டேஷனுக்குக் கிழக்கிலொரு மைல் தூரத்தில் உளது.

1 இதற்கு வடமொழியில் மொழி பெயர்ப்பே கும்பகோணமாம், கும்பகோணம் ஸ்டேஷனுக்கு மேற்கே முக்கால் மைலில் ஸ்ரீகும்பேசுவரர் கோயிலிருக்கிறது.

2 கொரடாச்சேரி ஸ்டேஷனிலிருந்து வடக்கே ஏழுமைலில் திருக்குடவாயல் இருக்கின்றது; இதினின்று வடக்கேஇரண்டுமைலில் திருநாலூரும், திருநாலூரிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கமாய் ஒரு மைலில் திருச்சேறையுமிருக்கின்றன.

3 கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தெற்கே நீடாமங்கலம் கற்சாலை மார்க்கமாய் 2 மைலில் உள்ள திருக்கலயநல்லூரி (சாக்கோட்டை) லிருந்து தென்கிழக்கே கற்சாலை மார்க்கமாய் 6½ மைலில் திருநறையூர் காணப்படும்.

4 நன்னிலம் ஸ்டேஷனிலிருந்துசற்றுத் தென்மேற்காய் 5 மைல் தூரத்தில் மாப்பிள்ளை குப்பம் மட்சாலை மார்க்கத்தில் உள்ளது திருவாஞ்சியம.

5 குழிக்கரை ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே சுமார் ஐந்து மைலில் உள்ளது.

$ என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேதவி ழுப்பொருள்
செக்கெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே,
—திருச்சேறை-திருக்குறுந்தொகை 2.

தொரு பயமுமில்லையென்றும், உலகம் கம்பிக்கிலும்¶ உற்றவினர் காய்ந்தாலும் அஞ்சவேண்டிய அவசியமில்லை என்றும் வற்புறுத்துகிறது. திருக்குடவாயலில் * அப்பர் பாடிய பதிகங்கள் மறைந்தன. திருநறையூரனவும் அவ்வாறேயாயின. திருவாஞ்சியத்தில் ஒருதிருக்குறுந்தொகையில் ஏழுபாசுரங்களே நின்றன. இவ்வூர் "கற்றுச் சேர்பவர்க்குக் கருத்தாவ" தென்றும், "பறப்பையும் பசுவும் படுத்துப்பலதிறத்தவும் முடையோர் திகழும்" "தெற்று மாடங்கள் சூழ்" பதியென திருநாவுக்கரசு நாயனர் கூறுகின்றார்†. இப்பதி மூவர் பாடலும் பெற்றது.மற்றையதாகும்திருப்பெருவேளூரில் ‡ அப்பர் பாடிய திருநேரிசை சமபாதீதமாய் "விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்து, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்ற தாகும்" என்னும் உண்மையைவெளியிடுகின்றது $. திருவலஞ்சுழியில் ஒரு திருத்தாண்டகப் பாசுரமும் ஒரு திருக்குறுந்தொகைப் பதிகமும் நமக்குக் கிடைத்தன.

இத்தலங்களில் பாடல்களும் திருத்தொண்டும் செய்து முடித்துத் ¶ திருவாரூருக்கு அப்பர் எழுந்தருளினர். இந்நகரின் இருபத்தொரு திருப்பதிகங்கள் திருமுறையிற் காணலாம். அவற்றைப்பற்றிப் பின் அத்தியாயங்களில் வரும். ஆயினும், சிலவற்றை இங்குக் கூறுவோம்:—

கல்மேல் கடலில் மிதந்த திருநாவுக்கரசு வருகையேற்ற திருவாரூர்த் திருத்தொண்டர்கள் கோட்டைவாயிலின் புறத்தில் வந்து எதிர்கொண்டு அப்பரை வணங்கியபோது, "குலம் பலம் பாவரு குண்டர் முன்னேநமக் குண்டுகொலோ" எனத் தம்மை யிகழ்ந்து சிவன் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் ஒன்றே இனிப்பெற விரும்புகின்றேனென்று ஆநந்த பரவசராய்த் திருவாரூர்த் திருவீதியினுள்ளே யெழுந்தருளினர். திருத்தொண்டர் தம்மைச் சூழ்ந்துவரத் தோரணங்கள் கட்டியிருக்கும்திருவாசலையடைந்து ஞானச் செல்வத்திற்கு இருப்பிடமாகிய தேவாசிரிய மண்டபத்திற்கு முன் வந்து புற்றுகந்தாரைத் தரிசித்துத் திருத்தாண்டகப் பதிகங்கள்பாடிக்"காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்" என்னும் "கலைப் பதிகம்"பாடிக்கோயில் வலம்வந்து தேவாசிரிய மண்டபத்தில் "மொய்புலாமலர்ச் சோலைக் குயில் கூவ மயிலாலு மாரூரரைக் கையினொழுமாதே * முன் கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேன்" என்னும் திருப்பதிகம் பாடியருளினர்.

† மார்பினிடத்தில் வழிந்தோடும்படி பொழிகின்ற மழைபோன்ற கண்ணீரால் நனைந்த திருமேனியுடன் தமிழ்ப்பதிகங்கள் பாடிய வண்ணமாய் உழவாரப்படையுடன் திருவீதித் திருப்பணிகளும் செய்து எழுந்தருளியிருந்த அந்நாட்களில் "பாடிளம் பூதத்தினானும்" என்னும் பதிக முதலான பல பாக்களைப் பாடி நமிநந்தியடிகள் நீரால் திருவிளக்கிட்ட தொண்டின் தன்மையை ஒரு திருவிருத்தத்துள் வைத்துப் பாடினர். அங்ஙனம் அமருநாளில் ‡ திருவலிவலம், $ திருக்கீழ்வேளூர், ¶ திருக்கன்றாப்பூர் என்னும் க்ஷேத்திரங்களையடைந்துதிருப்பதிகங்கள்பாடித் திருவாரூருக்கு மீண்டனர்.

மேற்கூறிய ஒவ்வொரு திருப்பதியிலும் அப்பர் பாடிய திருத்தாண்டகவிருத்தப்பதிகம் ஒவ்வொன்று திருமுறைகளிற் காணலாம். "வலிவலத்தான் காணவனென் மனத்துள்ளானே" என்னும் திருத்தாண்டகம், பெருமான் "அன்றியொன்றில்லை" யென்னும் பண்பை விளக்கும். "கீழ்வேளூர் ஆளுங்கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே" என்னும் திருத்தாண்டகம் பெருமான் பத்தர்கட்கு எத்தன்மையனென்பது காட்டும். § திருக்கன்றாப்பூர்த் திருத்தாண்டகம்,அக்காலத்திலவ்வூர்ச் சிவனடியார்கள் எத்

¶ (i) தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்த ரொருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னாருள ரஞ்சுவ தென்னுக்கே —டை 6.

(ii) வைத்த மாடு மடந்தைநல் லார்களும்
ஒத்தொவ் வாத வுற்றார்களு மென்செய்வார்
சித்தர் சேறைத் திருச்செந் நெறியுறை
அத்தர் தாமுள ரஞ்சுவ தென்னுக்கே —டை 7

* இதில் சம்பந்தர் பதிகங்கள் இரண்டு உள.

† அங்க மாறு மருமறை நான்குடன்
தங்கு வேள்வியர் தாம்பயி லூர்நகர்
செங்கண் மாலிட மார்திரு வாஞ்சியம்
தங்கு வார்நம் மமரர்க் கமரரே
திருவாஞ்சியம்-திருக்குறுந்தொகை 4.

‡ நாதனை யுலக மெல்லா நம்பிரா னெனவு நின்ற
பாதனும் பரம யோகி பலபல திறத்தி னாலும்
பேதனைத் தோன்றி னானைப் பெருவேளூர் பேணி னானை
ஓதநா வுடைய னாகி யுரைக்குமா றுரைக்கின் றேனே
திருப்பெருவேளூர்.திருநேரிசை 2.

$ திருவாரூர் என்பது தென் இந்தியா இருப்புப்பாதையில் ஒருசேர்க்கை இந்த ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே கற்சாலை மார்க்கமாய் ஒரு மைலில் திருவாரூர் மூலட்டானமும், டை ஆலயத்தின் உள் ஆவரணத்தின் தென்கிழக்கு மூலையில் திருவாரூர் அரநெறியும், டை தலத்தின் கீழ்வீதியில் திருப்பரவையுண் மண்டளி என்னும் தூவாநயனர் கோயிலும் உள. இத்தலத்தில் மூவரும் விசேடமான பதிகங்கள் பாடிப் பலகாலம் தங்கியிருந்தனரென்பதற்கு அத்தாட்சிகள் பல உள. சைவர்களுக்கு அப்பர் காலத்தில் இத்திருப்பதி சூளாமணியா யிருந்தது.

¶ இவற்றைப் பின் அத்தியாயத்தில் காண்க.

* திருமுறைகளிலுள்ள 'கையினாற் றொழாதொழிந்து கனியிருக்க...';என்பது பாடபேதமெனக் கொள்ளலாம்.

† மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றோளே
சார்வான திருமணமும் உழவாரத்
தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்
—பெரிய புராணம் 125.

‡ திருக்கன்றாப்பூருக்குத்தெற்கே அரைமைலில்உள்ளது.

$ கீழ்வேளூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே ஒருமைலில் உள்ளது.

¶ திரு நாட்டியத்தான்குடி ஸ்டேஷனுக்குக் கிழக்கே கற்சாலைமார்க்கமாய் 2 மைலில் திருவாரூரிலிருந்துதிருத்துறைப்பூண்டிக்குப் போகிற ரஸ்தாவில் சந்திக்கு மிடத்தில் வடபுறத்தில் குன்னூர் தோன்றும். இக்குன்னூரிலிருந்து கிழக்கே சுமார் 2½ மைலில் திருக்கன்றாப்பூர் இருக்கின்றது.

§ உளரொளியை யுள்ளத்தி னுள்ளே நின்ற
வோங்காரத் துட்பொருள்தா னாயி னானை
விளரொளியை விடுசுடர்க ளிரண்டு மொன்றும்
விண்ணொடுமண் ணாகாச மாயி னானை
வளரொளியை மரகதத்தி னுருவி னானை
வானவர்க ளெப்பொழுதும் வாழ்த்தி யேத்தும்

தன்மையரா யிருந்தாரென்பது காட்டி ‡ அத்தகையர் குணங்கண்டு சைவரென்னும் நாமம் தற்காலத்தில் வகித்த நம்மை நாணச்செய்கின்றது. இப்பதிகத்தில் 9-ம் பாசுரம் மறைந்து போயிற்று.

ளையொளியைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே
—திருக்கீழ் வேளூர்-திருத்தாண்டகம்.

‡ i இலங்காலஞ் செல்லாநா ளென்று நெஞ்சத்
திடையாதே யாவருக்கும் பிச்சை யிட்டு
விலங்காதே நெறிநின்றங் கறிவே மிக்கு
மெய்யன்பு புகப்பெய்து பொய்யை நீக்கித்
துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்ச
முண்டபிரான் இணையடிக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே— (4)

ii திருநிலையா லவரையுங் காவ லேவித்
திகையாதே சிவாயநம வென்னுஞ் சிந்தைச்
சுருதிதனைத் துயக்கறுத்துத் துன்ப வெள்ளக்
கடனீந்திக் கரையேறுங் கருத்தே மிக்குப்
பரிதிதனைப் பற்பறித்த பாவ நாசா
பரஞ்சுடரே யென்றென்று பரவி நாளும்
கருதிமிகத் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே— (8)
—திருக்கன்றாப்பூர்-திருத்தாண்டகம்.

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

1. கண்ணிற் கொரு மண்.

இலக்கண சிகாமணி இலக்கிய மகாகவி சாபாலப் புலவர் கால் வருந்தி மனம் நொந்து ஏமாங்கதம் சென்றடைய ஒன்றரை வருடங்களாயின. வேதபுரியில் நடத்தக்கருதிய வாசவனது விவாகத்தை நிறுத்திவிட்டு வேந்தனும் புஜங்கனும் பொய்ப்போர் வாய்க்கக் காத்திருந்தபின் புஜங்கன் கோமகனைக்கொண்டு கொற்றவனைக் கொல்விக்க ஏவி வந்த சமயமும் இதுவே. கொண்டுவந்த குறளையை வேந்தனிடம் கூறச் சாபாலன் இடைவிடாது முயன்றானெனினும், அமயம் நேரவில்லை. இரண்டொருமுறை அவன் மன்னனது கொலு மண்டபத்துள் புக எத்தனித்த காலத்தில் காவலாளர் மறித்து விலக்கினர். சிங்கமுகனைக் காண்பதும் கடாரச்செய்தியை அவனுக்குச் சொல்வதும் அதனால் தன் வஞ்சினம்முடிப்பதுடன்பரணிபாடுவதும்கவிச்சக்கரவர்த்தி யாவதும் ஒன்றும்இனி இயலாதென்று கையற்றுப் போயினன் சாபாலன். தன்னகர் வேந்தனது அவைக்களம்போகவர வழக்கமானால் அவ்விடத்திலேதன்காக்கைப்புராணத்தை அரங்கேற்றலாம் என்னும் ஓர் ஆசையும் அவனுக்கு இருந்தது. அதுவும் இப்பொழுது போயிற்று. எனின்,இந்நூலைஇனிநகரமாக்களுக்கேனும் படித்துக் காட்டித் தன் காலத்தைக் கழிக்க எண்ணி இரவுதோறும் தனது முன்றிலில் அமர்ந்து அப்புராணத்தை ஓதிப் பொருள்விளக்கி வருபவனாயினன். கேட்பதற்கும் நாடோறும் அங்குக் கூடினர் பலர். கதையின் ஆசையினாலோ. எனின், அன்று. தினந்தோறும் சாபாலன் தன் செலவிலேயே கற்கண்டு சுண்டல் பானம் முதலியன வந்தவர்க்கு அளித்தனன் ஆகையால், அவரனைவரும் வாய்க்குணமே வேண்டி மொய்த்தவராவர். புராணத்திலே பாதி வருவதற்குள் புராணிகன் பொருளின் பெரும்பகுதி இப்படிச் செலவழிந்து போயிற்று. புராண அபிமானத்தினாலே சனத் தொகுதி சேர்ந்ததென்று மதித்தனனாயின், கற்கண்டையும் சுண்டலையும் ஓரிரவு நிறுத்திச் சோதனை புரிந்திட உண்மை தெரியலாகும். மறுநாள் முன்றிலும் தானுமாய் முழங்க வேண்டுவதுதான். சுண்டலின் சுடுகையும் பானத்தின் இனிமையும் கற்கண்டினளவும் ஒருங்கே கூடி உண்டாக்கிய கீர்த்தி ஊரெங்கும் பரவப்பரவ, நாளுக்குநாள் கூட்டமும் மிகுந்து மிகுந்து வளர்வதாயிற்று. புலவன்தன் ஊக்கமும் அன்னதே.

இந்தக் காக்கைப் புராணத்திலே சுயம்வரப் படலம் ஒன்றுளது. சாபாலனும் தனது கவித்துவம்அத்தனையும் கொட்டி இந்தப் பாகத்தை மெழுகி யிருக்கின்றான். சுங்கிலி என்னும் ஊரைச்சார்ந்த மயானத்திலே காக வேந்தனது அருந்தவப் புதல்வி சோரக் கண்ணி யென்பாள் வகுத்த சுயம்வரம் இது. புராணப் பிரசங்கத்தில் சோரக்கண்ணி சுயம்வரப் படலம் வந்தஅன்று சாபாலன் கரை கடந்த ஆர்வத்தனாயினான். கையேடு படிப்பவன் பாசுரங்களைப் படிக்கும்போதே புலவன் தன் கல்வித் திறத்தை நினைத்து நினைத்துப் புளகம் பூத்தான்.

அங்க வங்க கலிங்க காந்தாரமாதியாய எல்லாத் தேயங்களிலிருந்தும் காகக் குரிசில்கள் தத்தம் பரிவாரங்களுடன் சுங்கிலியின் ஈமக்காடு அடைந்தனவாம். சர்வாலங்கார முடையனவாம். களிசிறந்த முகத்தினவாம். சோரக்கண்ணியின் கருவுரு விட்டகலா உள்ளத்தனவாம். அவை, கட்டிய புகையெனக் கள்ளியிலும் எருக்கிலும் அங்கங்கு அமர்ந்து விளங்கினவாம். நெய்தல் ஓசை எங்கும் முழங்கினவாம். சோரக்கண்ணியும் அச்சூழல்வாய்த் தோழியர் உழைவர அன்னம் போல் பறந்து வந்து மின்னலைப்போல் தோன்றினாள். அவளது அழகைக்கண்டு காக வேந்தெல்லாம் இறகு சிலிர்க்க முள்ளம்பன்றிபோல் ஆயினவாம். கற்பகத் தருவைச் சார்ந்த காகமோ இவையெனும்படி கண்ணிமைக்காமல் அரசிளங்குமரியின் வனப்பை மாந்தி மாந்தி மகிழ்ந்தனவாம். அன்ன தன்மையவான வாயசங்களை முதற்பாங்கி தன் தலைவிக்கு ஒவ்வொன்றாய்க் காட்டி அதன் ஊரும் பேரும் அது ஆளும் சுடுகாட்டின் வளப்பமும் வெற்றிப் பிரதாபங்களும் எடுத்துக் கூறிக்கொண்டு வந்தாள். இந்த இடம் வந்தவுடன் சாபாலன் ஆனந்தப் பரவசனாயினான். "ஆகா! புராண அபிமானிகளே, இப்பாசுரங்கள் கற்கண்டினும் சுண்டலினும் இனியன கண்டீர். எந்தவிதத்திலோவென்றால், கற்கண்டில் எறும்புண்டு, சுண்டலில் மிளகாய் உண்டு. சொல்லுக்கொருபொன் விலை பெற்ற சொற்களைச் சும்மாக் கேட்க நீர் செய்துள தவந்தான் என்னே! காசில்லாமற் போனாலும் காதாவது கொடுங்கள். உங்கள் முழுமனத்தையும் செலுத்திப் பிள்ளையார்போல் கேளுங்கள். மீன் குட்டிக்கு யார் நீஞ்சப் பழக்கிவைத்தார்கள்? அதைப்போல் நீங்களும் இந்தக் கல்விக் கடலிலே ஆடுங்கள். கேளுங்கள், கேளுங்கள். கண்களிக்கக் கேளுங்கள் 'என்னும் பீடிகையுடன் சாபாலன் செய்யுள் செய்யுளாக விரித்துரைத்துவருகையில் கடாரக் காக்கையின் வர்ணனைச் செய்யுளும் முறையே வந்தது:—

ஐந்துநீள் விரல தழகிய மூக்கது
பொந்தினிற் புழுவை விழுங்கிடு வாயது
நந்தலில் குணத்து நங்கையே நான்முகன்
தந்ததிக் கடாரந் தாவிய காக்கையே.*

என்று புலவனது மாணவன் ஏட்டினின்று வாசித்தான். அந்தச் சமயத்தில் எழுந்தது ஒரு கோபம் சாபாலனுக்கு. இச்செய்யுள்வரைந்திருந்த ஏட்டைப் பறித்துத் துண்டுதுண்டாய்க் கிழித் தெறிந்துவிட்டான். நமக்குரிய போனகம் போயிற்றே இன்றைக்கென்று அங்கிருந்தவ ரனைவரும் ஏங்கினர். ஆனால், சிறிது தூரத்தில் நின்றவொரு துறவிவிலாவிறச் சிரித்தனன். இது கண்ட கவிக்குச் சினம் பின்னும் மூண்டது. துறவி யென்பதும் பாராமல், "ஏடா, மூடா, எதற்காக நகைக்கின்றனை? என் பாட்டைப் பழித்தோ!" என வெகுண்டனன். மாறுவேடம்பூண்டு நகரிசோதனை புரிந்து வரும் சிங்கமுகனே அவ்விரவு துறவியாய்ப் போந்து அங்கு நின்றனன் என்பதை எவ்வாறு அறிவான் சாபாலன்? "ஐந்துவிரல் ஏது ஐயா, காக்கைக்கு?" என்று வேந்தன் மீண்டும் சிரித்தான்

"இலக்கண வாசனையில்லா மடத்துறவியே, கேள். எதுகையின்பம் நோக்கி ஒரு விரல் விரிந்தது. செய்யுள் விகாரம் என்பது ஒன்று உண்டு என்று நீ அறிந்திருந்தால் சிரித்திருக்கமாட்டாய்"

"செய்யுள் விகாரம் அறிந்திலேனாயினும் இன்று விகாரச் செய்யுள் எதுவென்பது தெரியக்கண்டேன். ஆயின், இன்பமாய் ஒரு விரல் வளர்ந்திருக்கும் இக் காகத்தின்மேல் உனக்கென்ன இவ்வளவு கோபம்? நான்முகனே தந்த இந்தக் காகச் செம்மலை நீ நிந்தித்ததேன்?"

"காகத்தின்மீது கோபமில்லை. செய்யுளும் அழகாகவே அமைந்திருக்கின்றது. ஆனால், அதன் நாட்டை வெறுக்கின்றேன். அந்தப் பாழாம் கடார வேந்தன் உன்னைப்போல் ஒரு காலத்தில் என்னைப் பார்த்துப் பல்லை இளித்துளான். படுபாவி யவன் புவனேசுவரன் ஆளுகின்ற நாட்டிற்கும் என் புராணத்தால் பெருமை உண்டாவதோவென்று ஏட்டைக் கிழித் தெறிந்தேன்."

"ஆயின்,இக்கடாரக் காக்கையை அடித்துத் துரத்துவோம், நீ வருந்தேல்; மற்று, அக்கடாரம் காக்கும் அரசன் உன்னைப் பார்த்து நகைசெய்த காரணம் என்னவோ?" என்று சிங்கமுகன் வினவினான். இதற்குப் புலவன் விடையுரைக்க வாயெடுக்குமுன் அங்கிருந்த கூட்டத்தினுள் பெரியதொரு தமரம் உண்டாயிற்று. புலவனும்துறவியும் பேசிய பேச்சினில் ஒருசொல்கூட மற்றவர்களுக்கு விளங்கினதில்லை.கடாரக்காக்கைஇன்றுவந்ததால் சுண்டலும் பானகமும் இழக்கலாயினோம் என்னுமொருதுன்பமேஅவர்தமை வருத்தியிருந்தது. ஆதலால், இக்காக்கையை ஓட்டுவோம், என்று துறவி விளம்பியவுடன் அந்தப் புராண அபிமானிகள் தமக்கு நல்ல காலம் பிறந்ததென்று எண்ணித் தூர்நிமித்தம் காட்டிய இக்காக்கையைத் தொலைக்கும் செய்கையில் அவர்களும் சேர்ந்தனர். கைதட்டிக் கல்லெறிந்து 'உச் உச்' என்று பறவைகளோச்சும் அபினயம் காட்டி எல்லோரும் எடுத்த ஒலியிலே சாபாலன் சொற்கள் அடங்கிப் போயின. சாபாலன் சொல்ல வந்ததைக் கேட்பதற்கு ஆவல் கொண்டிருந்த சிங்கமுகனுக்கு இது வருத்தம் விளைத்தது. "நீர் ஓட்டிய காகமும் கடாரம்போய்ச் சேர்ந்திருக்கும். இனி ஓய்ந்திடுங்கள். இல்லையேல்..." என்று அவ்வொலிக்குமேல் தன் குரலையெழுப்பித் தெழித்தனன். அரவமும் சிறிது குறையச் சிங்கமுகன் காரணம் என்னென்ன மீண்டும் சாபாலனைக் கேட்டான்.சாபாலன், "ஏ, துறவி, உனக்குக் கூறி யாது பயன்? புரவலரையும் புலவரையும் பொருந்திய இச்செய்தியை நீ எங்ஙனம் உணர்வாய்?" என்றவனுக்குச் சொல்லிவிட்டுச் சபையுளோரைப் பார்த்து, "என் நண்பர்காள், அக் கடையாய கயவன் புவனேசுவரனிலும் இழிகுலத்தவனையான் எங்கும் கண்டிலேன் என்னை நகைத்தது மல்லாது நம்வேந்தன் சிங்கமுகனையும் அவன் நிந்தித்துளான். ஆதலாற்றான் அப்பாட்டையும் ஏட்டினோடு துண்டு துண்டாக்கித் தொலைத்தேன். இனி அடுத்த பாசுரத்திற்குப் போவோம்" என்றுரைக்கத் துறவி வேந்தன், "இரு, இரு, புலவ, எம்மரசனை இகழ்ந்தானால் நீயதை அவனிடம் சாற்றியதுண்டோ?" என வினவினான்.

"என்னனைய புலவரால்தான் தன் பெயரும் புகழும் எங்கெங்கும் பரவுகின்றதென்று நன்றியில்லா நம்மரசன் வாயில் காப்போரால் என்னை உட்புகவிடாமல் தடுக்கின்றான்.என்னசெய்வது! கைம்பெண்போல் தன்னை யாரும் காணாமல் மூலையிடம் தேடுகின்றானே சிங்கமுகன்......பகல் பக்கம் பார்; இரவு அதுவும் பார்க்கப்படாதென்பர்......இவ்வுரை அவனுக்குளட்டினால் வருத்தம் உண்டாகும். சிங்கமுகனுக்கோ எங்கெங்கும் கண், எங்கெங்கும் காது........நல்லது மாணவா, மேற்கவியைப் படி."

"ஐயா, சிங்கமுகனுக்குக் கண்ணிரண்டு; காதும் இரண்டே. அவை நான்கும் இத்தருணம் ஓரிடத்தில் தான் இருக்கின்றன. ஆகையால் கடாரத்தில் நடந்ததைக் கூசாமற் சொல்."

'ஏ, நீயென்ன, அரசனோ,அதிகாரம் செய்கின்றாய்?'

"இப்பொழுதென்ன, என்னைப்பார்த்தால் உனக்கு அரசன்போல் தோன்றுகின்றதா? கேளிது புலவா, எனக்கு அரசன்மனை வாயிற்பாலகன் ஒருவனைத் தெரியும். எந்த விதந்தனில் கடாரமன்னவன் இந்நகர் வேந்தனைப் பழித்தான் என்பதை நீ கூறினால், அதற்குப் பிரதிபலனாக அவ்வாயில் காப்பவனிடம் சொல்லி நாளைக்கே உன்னை உள்ளே விடும்படி செய்வேன். சொல்."

---

* இச்செய்யுளின் பொருள்:—நந்தல் இல்=கெடுதல் இல்லாத, குணத்து=குணத்தையுடைய, நங்கையே=நங்கையாகிய சோரக் கண்ணியே, இ=இந்த, கடாரம்=கடாரத்திலிருந்து, தாவிய=தாவிவந்த, காக்கை=காகமானது, ஐந்து=ஐந்து, நீள்=நீண்ட, விரலது=விரல்களை உடையது. அழகிய=அழகான, மூக்கது=மூக்கை உடையது. பொந்தினில்=மரப்பொந்தினில் இருக்கின்ற, புழுவை=புழுக்களை, விழுங்கும்=விழுங்குகின்ற, வாயது=வாயை உடையது (மேலும்) நான்முகன்=பிரம்மனாலே, தந்தது=சிருஷ்டிக்கப்பட்டது. (என்று தோழி எடுத்துக் கூறினாள்)

"கவிஞன் ஒருவன் இவனது சபைக்குப் போகப் பிறருதவி வேண்டியிருக்கிறதென்றால் இம்மன்னன் கலையின் பெருமையை ஆதரிக்கின்ற அழகு அவ்வளவில் இருக்கின்றது. ஊசி போகின்ற வழியே நூல் தொடர்வது போலல்லவோ இராசசபைக்குப் புலவர் போவது எளியதாயிருத்தல் வேண்டும். இருப்பினும் நம்மரசன் குற்றங் குறைகளை வெளிநாடுகளில் விட்டுக் கொடுக்கலாமா! ஆதலால், நான்......"

"ஆதலால், நீ என்ன செய்தாய்?"

"என்ன செய்தேன்! கடார நாட்டரசன்முன் இந்தச் சிங்கமுகனைப் புயல்போல் பொழியும் வள்ளல் எனப் புகழ்ந்தேன். அது பொய்யென்று அவர்களும் அறிந்திருந்தார்களோ, யாதோ! இடி இடியெனச் சிரித்தனர்."

"அதன்மேல்?"

"அதன்மேல் ஒன்றுமில்லை. 'ஏமாங்கதம் புரந்தளிக்கும் எம் வள்ளலது கொடையின் கீர்த்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே அவன்வயின்சென்று யாசகம் செய்யப் பல்லைத் திறந்து இப்பொழுதே பழகிக் கொள்ளுங்கள்' என்று நானும் எள்ளி அவர்தம் வாய்க்குப் பூட்டிட்டேன். ஆனாலும், என்ன? எத்தனை கெஞ்சினாலும் ஒரு காசும் கொடாதவன் நம்மரசன் என்பது என் மனத்திற்கு மாத்திரம் தெரியும்."

"தெரியுமா உன் மனத்திற்கு!......ஏ, புலவா, உன்னைப்பார்த் தல்லவோ நகைத்தனரென்றும், என்னை.... ...அதாவது, சிங்கமுகனை நிந்தித்தார் என்றும் முதலில் கூறினாய். ஆனால், சிரிப்பு ஒன்றே உன் விருத்தாந்தத்தில் வெளியாயிற்று. விளங்கச் சொல்."

"எல்லாம் அவ்வளவுதான் போமையா! மறித்து மறித்து என்னுடன் வார்த்தை வளர்க்க வேண்டா. போம்! போய்உம்கமண்டலத்தைக்கழுவிக்கொள்ளும்; போம்!" என்று சாபாலன் பகர்ந்து, அடுத்த செய்யுளின் இன்பத்தில் திளைக்கப் புகுந்தவனாய்க் கையேடு வாசிப்பவனை ஏவினான். அவனும்,

> மாளவக் காகமே மற்றிது மங்கையே
> கானமா முகிலினுங் கரியதன் மூக்கினால்
> கேளமா வெலியையுங் கிழித்திட வல்லது
> சாளா நுழையுமச் சாகசஞ் சொல்வனே *

என்று வாசிக்கப், புலவன் இதனினுள்ள நயங்களையெல்லாம் விரித்துரைப்பவனாயினான்.

கடார நாட்டில் தன்னைப்பற்றி ஏதோ நிகழ்ந்துளது என்பதுவரையில் சிங்கமுகனுக்குத் தெரியலாயிற்றே யல்லாமல் புவனேசுவரன் இழைத்தவசையோ இன்னதென்பது சரிவர விளங்கவில்லை. இந்தப் புன்கவிதான் தன்னை உலோபி என்று வாயில் வந்தவாறு வைதுளான். ஒளிந்தும் உருவைக் கரந்தும் ஒற்றுக் கேட்டவர் தம்மைப்பற்றி எந்நாளும் நல்லன கேட்டிரார். எனினும், பித்தேறிய ஒருவன் பிதற்றியதூற்றல் இதுவென உணர்ந்த அரசன் சாபாலன்மீது சீற்றங் கொண்டிலன். தன் மாளிகை நண்ணிப் பள்ளியமர்ந்தான். பள்ளியிற் சில நினைவுகள் அவனுக்கு நேர்ந்தன: "கடாரத் தரசனுக்கும் எனக்கும் இடையே பகை யொன்று மிலதே! என் வண்மையை அவன் வைது நகைத்ததேன்? அரண்மனைக்குள் தன்னை விடாத எரிச்சலால் பேசுகின்ற இக்கவிக் கீழ்மகன் கிடக்க! நான் கொடாத வச்சையன் என்ற சொல் நண்ணலார் வாய்நின்றும் பிறவாதே! இக்கயவன் சொன்னதெல்லாம் பொய்தானோ!......பொய்யோ மெய்யோ, புலவா, என்கையில் ஒரு பகைவனைக் காட்டித் தந்தாய். என் புத்திரச் செல்வனும் உய்ந்தான் இனி!" என்று தேறிய மனத்தினோடு சிங்கமுகன் துயின்றனன்.

பொழுது புலர்ந்தவுடன் அரசன் எழுந்து புஜங்கனுக்கு ஆளனுப்ப அவனும் வந்தபின் இருவரும்வெகு நேரம் அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்தனர். அவர் ஆடிய உரையின் கருத்தும் போக்கும் இன்னவென உணர்தல் அரிய தன்று. புத்திர வாஞ்சையால் அரசிற்பாதி அளித்தற்கு இசைந்தும் பயன்படாது உழலும் வேந்தனும், அவ்வரசைக் கொடுப்பவன் கொடுக்க ஏற்பதற்கியலாமல் தவிக்கும் சேனாதிபதியும், இருட்டறைப்பட்டவர், வெளியேகும் வாயிலென்று சுவரொடு முட்டுமாபோல், புன்மொழிப் புலவன் ஒருவன் ஓதிய கோள்தனை ஆதாரமாகக்கொண்டு தம் தெருமரல் தீர்க்கக் கருதினர். "ஆதலால், புஜங்கா கடார நாட்டில் பகை விதைத்துப் போர் வளர்த்து வா," என்று அரசன் உரையை முடித்தான். போர் விளைக்கும் வேளாண்மையில் கை வந்த புஜங்கனும், அந்தப்பயிர் தனக்கொரு கதிர்முடி ஈனும் எனும் ஆர்வத்தினனாய்க் "கொற்றவா, என்வினை முடிந்ததென்று இன்றேகொள். நீ முன்சொன்னவை மறக்காது இங்குச் செய்யவேண்டுவன செய்து வைக்க வேண்டுகின்றேன்," எனத்தொழுது ஏகி, மறு தினமே அந்நகர் விட்டகன்று நாலொருதிங்களில் கடாரமும் சென்றடைந்தான்.

* * * *

இது முன் நிகழ்ந்தவண்ணம். காவலாளர் தடுக்கத் தரியாது உட்புகுந்து புவனேசுவர வேந்தனைப் புஜங்கன் வெருட்ட வந்த வரலாறும் இஃதே. எனின், 'காக்கைப்புலவனைக் கண்டு நகைத்தோம்; நின் மன்னனைப் பழித்தோமில்லை,' என்று அந்த அவையமர்ந்தோர் தேர்ந்து செப்பிய உத்தரம் இவன் எண்ணத்திற்குப் பொருந்துவ தெங்ஙனம்! 'நீ கலக்காவிடின் உன் பாட்டன் கலக்கியிருப்பான்' என்ற நியாயத்தால் ஆட்டை அடித்துத் தின்ற ஓநாயின் பணியையன்றோ இப்பொழுதிவன் மேற்பூண் டிருக்கின்றான்? ஆதலால் புஜங்கன் கடுங்கோபம் கொண்டவன்போல் ஓங்கிய குரலால், 'எம்மரசன் புகழை எச்சிலென்று பழித்தீரோ, நீவிர்! அகம் கருகிக் கொடுப்பவனோ சிங்கமுகன்! மன்னரை மன்னர் இவ்வாறு ஏசுவது அழகிதோ!" என்று மேன்மேலும் சினந்தனன்.

"ஐய, வறிதே யேன் யாம் சொல்லாததைச் சொல்லிச் சினமூட்டுகின்றனை! யாவன், நீ? பிதற்றலே நின் கருமமாயின், எம் செவி தூர்ந்தது. இனி எம்முன் நிற்றியேல் அகற்றிவிடுவோம்!" என்று புவனேசுவரன் எதிர் விளம்பினான்.

* இச்செய்யுளின் பொருள் :—மங்கையே=சோரக்கன்னி பெண்ணே, இது=இங்கு இருக்கும் இது, மாளவ காகம்—மாளவ தேசத்திலிருந்து வந்திருக்கும் காகம். கேள் அமா=நான் சொல்வதைக் கேள் அம்மா, கானமாமுகிலினும்=கரியமேகத்தினும், கரிய=கருமையான, தன் மூக்கினால்=தனது மூக்கினால், எலியையும்=எலியையுங்கூட, கிழித்திட வல்லது=கிழிக்கக் கூடியது. (அதுவன்றி) சாளரம்=வீடுகளின் பலகணி வழியாய், நுழையும்=(இந்தக் காகம்) நுழைகின்ற, அ=அந்த, சாகசம்=வீரச்செயல்களை, சொல்வனே=என்னால் எடுத்துச்சொல்ல இயலுமோ! (என்றான் அத்தோழி).

"எங்கோமான் சிங்கமுகனது படைத்தலை யாளும் புஜங்கன் யான், ஐய, வாயினால் பிதற்ற இங்குப் புகுந்தேனல்லேன். என்கையுடை அலகினால் உனது அனிகத்தைச் சமரிலே சிதைத்து உளர வந்திருக்கின்றேன்."

"நீ வேண்டுவது போரேயாயின், என் தோளிலும் சிறிது தினவு உளது," என்றனன் சரபசூரன்.

"கணையம் என்னவே வீங்கும் கற்றோளினன் எமதணித்தலைவன். எனினும், நீ அமர் கருதும் காரணம் யாம் அறிந்ததில்லை. வீண் சண்டையுட் புகுந்திட விழைந்திலம்," என்று புவனேசுவரன் இயம்பினன்.

"தினவுதான் அறவே கழிய நின்படைத் தலைவன் தோளையே துணித்திட யானுளேன். மற்று, நீயும் உன்னொடும், சிரித்தலொன்றேயலாது சேவகந்தான்வேறிலா இங்குள ஏனையோரும் உய்யவேண்டுமாயின், கடாரப் போர் நிகழாவண்ணம் காப்பதற்கு எது வழியென்று இன்றே முயன்றறிவாய்!"

'போரஞ்சிப் பகர்ந்தோம் அல்லோம். ஆயினும், இருதிறத்தோரும் வீணே மடியாமல் காக்க எம்பெருமைக்கியன்ற வழியொன்றுளதாயின் இணங்குவோம். இயம்புதி."

"இப்பிழை பொறுத்தி, என்று எம்மரசனுக்குப் பணிவுடன் ஒரு நிருபம் தீட்டி என்கைத் தருவாயாயின் சிங்கமுகப்பெரியோன் பொறுப்பன். இல்லையெனில் அவன் சீற்றத்திற்கும் என் ஆற்றலிற்கும் ஆளாவாய்; புவனேசுவரா, எண்ணித் துணிக!"

"புஜங்கா, இரண்டையும் எள்ளினேன், போ! அந்தணனென்றும் பாவலனென்றும் பொய்புகன்று உட்புகுந்த கள்வா, என்னை நீ இவ்விழிவுரை உரைத்த நாவுடன் மீள்வையோ!" என்று கடார மன்னவன் உருத்தெழுந்து காவலாளரைக் கூவிப் புஜங்கனைப்பற்றிப் பிணிக்குமாறு விதித்தான்.

புஜங்கனும் உருவின வாளினனாய்க் கதுமென விரைந்தெழுந்து, "என்னைப்பற்றிப் பிணிக்க வல்லவரும் இங்குளரோ! கபவீர், ஓரடி அணுகுவீராயின், யான்உள்வரத்தடுத்த மற்றப் பாலகர்களுக்குற்றகதியே உமக்கும் வாய்க்கும் தலையொடு தலைதெற்றித் தெங்கின் குலையெனத் தூணுடன் தொங்கவிட்டிருக்கின்றேன்! வெளி வாயில் சென்று பாருங்கள்," என்று நிலம் நெளியக் காலால் உதைத்து மண்டபத்தின் முகடு கிழியக் கர்ச்சித்தான். பற்ற வந்த படர்களோ இக்கர்ச்சனைக்கஞ்சாது புஜங்கனை நண்ணினர். அச்சமயம் பலதேவர் அரசனைப் பார்த்து, "துட்டனேயானாலும் ஐய, இவன், தூதனென்று நின் திருமுன் போந்துளான். அன்னவனைப் பற்றலும் பிணித்தலும் கோத்தருமம் ஆகா," என்று நவின்றனன். அது கேட்ட புஜங்கன், "யான் தூதனென்னும் உரிமையால் நும்மிடம் பரிவு வேண்டிலேன். வேறு பேர் விளம்பி யான் இங்கு வந்ததும் இப்பரிவு தவிர்க்கவே தான். நிந்தனைக்கு நிந்தனை எதிர்வழங்க நேர்ந்துளேன். நும்பால் ஆண்மையுண்டாயின், எம்மிறைவனுடன் போர் புரிந்திட இன்றே அறைமின்!" என்று சாற்றினான்.

போரசைக் கிணங்கியதோர் வீராவேசம் பெற்றுள புஜங்கன் இன்னவாறு அறைகூவி நிற்றலும், கடாரத்தரசன், குணபாலன் சரபசூரன் பலதேவர் அய்யனார் ஆயினோரையும் மற்றுள மந்திரக் கிழவரையும் தனியிடம் அழைத்து, அன்னவர் கருத்தையும் ஆராய்ந்துணர்ந்தபின், மீண்டும் மண்டபம் அணுகிப் புஜங்கனுக்கு இவை உரைத்தான்: "பூசலே புரிந்திட, புஜங்க, துணிந்தோம். காரணமின்றியே கடும்போர் விளைவதோ எமக்கு வருத்தம் தருகின்றது. புன்கவி அவனும் துன்மதி நீயும் கைகலந்து நும் நாட்டையும் அரசையும் வீரர்தம் உயிரையும் கொன்னே அழிக்கப் புகுந்தீர், என்செய்வீர்! விதியை விலக்க வல்லீரல்லீர்!"

கருதியவாறே கருமம் கைகூடுகிறதென்று புஜங்கன் களிப்படைந்தான். போரினில் தோல்வி யென்பது ஒன்று உளது எனும் எண்ணம்இதுகாறும் வெற்றியே கண்டுள அவனுக்குத் தோன்றவில்லை. "வேந்தே, போர்தந்த நின்மொழிக்குநான் கைம்மாறுதேடலரிது. விதியென்றோ செப்பினாய்? விதி செய்த வினையை அன்று வெங்களத்தில் காண்டி. விடையெனக்குத் தந்திடு. நீமறுமுறை இமைக்குமுன் நானென்படையொடு மீண்டு இந்நகரை அணிவகுத்துச் சூழ்ந்திடுவன். மன்னவா, என் சிலையுமிழ்ந்த சரத்தினும் கடுகி மீள்வேன்," என்றுரைத்தனனாகிப் புஜங்கன் ஏகுதற்குநினைக்குமளவில் புவனேசுவரன், "ஐய, அற்றன்று. நீ இவ்விடம் விட்டகல்தல் எம் சூழ்ச்சிக்குப் பொருந்தவில்லை. உனதரசன் என்வயின் இரப்பது போர். இரப்பவர் இருக்குமிடம் தேடித் தருவதே கொடை. ஆதலின், எம்மணித்தலைவன் நாளெட்டில் படைதிரட்டிப் புறப்படுவான். அதுகாறும் நீயுமிங்குக் காவலில் இருந்து அவனுடன் ஏமாங்கதம் செல்வாய். கடாரப்படை நடந்த புழுதியினில் ஆடுதற்கு நீ செய்துள பாக்கியமும் பெரியது," என்றனன்.

"நன்று, நன்று, புவனேசுவர, நின் போர்த்தருமம் மிக நன்று! படைத்தலைவனைச் சிறைப்படுத்திப் போர் புரியும் வீரமும் உனக்குப் போதுமோ!"

"அவ்வாறு மன்று, புஜங்க, அவ்வாறு மன்று. ஏமாங்கதத்தின் எல்லைக்குள் எம்சைனியம் சேர்ந்ததும் சரபசூரன் உன்னைப் போகவிடுப்பன். நீயும் உன் படைஞரை நடத்தலாம். அவருடன் கூடியே நீமாயும் உரிமையைக் கவர்ந்திடோம்."

"இந்த வஞ்சனை யெதற்கு! உன் கருத்தென்ன?"

"வஞ்சனையுமன்று, யுத்ததந்திரமிது. அன்னதன் கருத்தை உனக்கு உரைக்க இசையோம். ஒன்று நிச்சயம்: வாளன்றித் துணைதேடாக் கொற்றவற்கு வஞ்சனை வேண்டா!"

அவையும் கலைந்தது. அவரவர் தத்தம் இடம் சேர்ந்தனர். சரபசூரனது காவலில் அமர்ந்த புஜங்கனும் அவன் மனையேகினான். இது கழிந்த நாலிரு திங்கள் அவ்வூரெங்கும் படையெழும் முழக்கத்தோடமைந்திருந்தது. குறித்த நாளில் நால்வகைச் சேனையும் புடை சூழச் சரபசூரன் புஜங்கன் உடன் ஏக, அந்நகர்விட்டுப் பிறப்பட்டான்.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

வேத்திரகீயச் சருக்கம்

187 பக்கத் தொடர்ச்சி

அங்கண்மா ஞாலமெங்கும் ஐவரும் குந்தியும், அரக்கு மாளிகையில் மாய்ந்தா ரென்று அலமருங்காலே, வீமனும் மற்றையரும் பெரியதோர் வனம் வந்தடைந்தார்கள். அவ்வனத்திடை நள்ளிருளில், இவர்களைக் கொன்று தின்ன வேண்டுமென்னும் அவாக்கொண்டு அக்கானகத்தி லுறையும் இடிம்பனுடைய தங்கையாகிய இடிம்பி இவர்களுறையும் இடம் வந்து சேர்ந்தாள். வந்தவள் பாழிய பணைத்தோள் வீரனை வீமனைக் கண்டு காமுற்று நின்றாள். இராக்கதக் கூட்டத்தினளேனும், அவள் தன் வனப்பாலும், மற்று மரிவையர்க்குரிய குணங்களாலும் அரமடந்தையென் றையமெய்தத் தக்கவள். வீமனைக் கண்களாற் கண்டு, "இவ்வ னத்திலிந் நள்ளி யாமநீ யென்கொல் வந்தவா றிவர்க ளியாரென" வினவினளாம்.

அரக்கியொருத்தி அழகால்நிறைந்த மானிடனொருவனைக் கண்டு காமுறுதல் புதியதோர் செய்கையன்று. இராமாயணத்திலும் சூர்ப்பணகையும் அயோமுகியும் இவ்வாறே இராமலக்குமணர்களைக் கண்டு காமமெய்தி நின்றார்கள். நாம் முன் சொன்னபடி பாரதம் காலத்தால் முந்தியதானாலும், வில்லிபாரதம் கம்பஇராமாயணத்துக்குப் பின்னரே எழுதப்பட்டதாதலால், வில்லி அவ்விருவர் செய்கைகளையும் முன்னறிந்தே தம் நூலை எழுதப் புக்கார். இச்சருக்கத்திலும், 'அரக்கர் பாவை நீ, காய்ந்தமை யறிதிமுன்கணையிராமனே' என்று வீமன் இடிம்பிக்குச்சொன்னதாகவும் இவரே வரைந்துள்ளார். மேலும் இராமாயணத்திற் சொன்ன இருவரும் அடைந்தது காமம்; இவளடைந்தது காதலென்று சற்றே உயர்த்திக் கூறும் தரத்தது. அங்ஙனமாகக் கவி, இடிம்பி இவர்களைக் கண்டவுடன் முதன் முதலாகத் தானே வீமனோடு வார்த்தையாடினதாகக் கூறியுள்ளார். கம்பர் சூர்ப்பணகைவரும் அரவத்தாலும், ஆரவாரத்தாலும், ஒரு பெண் வருகின்றாளென வறிந்து இராமன் அரவம்வரும் திசைநோக்கிச் சூர்ப்பணகையைக் கண்டானெனவும், அச்சமயம் அவளும் வந்து அவனிணையடி வணங்கி, நவ்வியி னொதுங்கி யிறைநாணியயல் நிற்ப, அவளை இராகவனும், "ஏதுபதி யேதுபெயர் யாவருற வென்றான்' எனக் கூறி யுள்ளார். தன்னிடம் காதற்கொண்டு வருபவள் அரக்கியாயினும், இந்து தேய முறைப்படி ஆடவனே அவளை முந்துற வினுதல் இயல்பும் சிறப்பும் ஆகும். அப்படி வினுபவிடத்தும் நாணத்தாற் பெண்கள் தங்கள் ஆர்வத்தை வெளிப்பட உரையார்கள். அதுகொண்டே அயோமுகியைக் கன்றிருளிற் கண்ட இலக்குமணனும்,

> மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய்
> யாவள டயுரை செய்கடி தென்றான்.

என்று கம்பரும் கூறினர் இவையனைத்தும் அறிந்த வில்லிபுத்தூரார் இச்சமயத்திற்கேற்ப வீமன் இடிம்பியை வினவினன் எனக்கூறாது இடிம்பியே வீமனைக் கேட்டாள் என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும், இவரே இடிம்பி வாக்காக,

> கொம்மை வெம்முலைத் தெரிவை யர்க்குளங்
> கூசு மாசைநோய் கூறு கிற்பதென்
> றெம்ம னோர்களுஞ் சொல்வர் யானுனக்
> கெங்ங னேகொலா மிறுதி கூறுகேன்

என்று சொல்லியிருப்பதையும்,

> 'அவ்வ னத்தில்வா ழரம டந்தையென்
> றைய மெய்தவோ ரடல ரக்கிவந்து'

என்று சிறப்பித்துச் செப்பி யிருப்பதையும் நோக்கில் இடிம்பி, அச்சம், மடம், நாணம், எனும் காவல் நீக்கித் தானே வீமனோடுரையாடினுள் என்பது பொருத்தமுடையதாய் எமக்குத் தோன்றவில்லை.

நீவிர் யாவிர் என இடிம்பி கேட்டபின்னும் வீமன், அவளுக்கு மறுமொழி தாமல், நான் வந்தவழி யுனக்குச் சொல்லேன், நீ எனக்கு முதலில் உன்வரலாற்றையுரையெனக் கேட்டனனும். வீமனுடைய முரட்டுத்தனத்துக்கும், நாணயமில்லாவியல்புக்கும்,இம்மொழிகள் எவ்வளவு ஏற்றமுடையனவேனும், ஆண்மை நிறைந்த வீமன் கேவலம் பெண்பாலொருத்தியிடம் தன் வீராவேசத்தைக் காட்டி இவ்வார்த்தைகளை உரைத்திரான் என்பது திண்ணம்.

பெண்பாலரிடத்து அவன் மிகவும் இரக்கமுடையவன். திரௌபதி தனக்கு ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் அவனைக்கொண்டே முடித்துக்கொண்டு போயிருக்கிறாள். மேலும், அவன் இளகிய மனமுடையவன். பேசும்போது மட்டும் மிருதுவாய் வசனிக்கானே யொழிய, தன்னுடைய உணர்ச்சியாலும், செய்கையாலும் பிறரிடம் ஆதரங் காட்டுபவனே. அவன், ஆங்கிலத்தில் கூறுவது போல், கடைச்சல் பிடிக்காது, கனியிலிருந்து கண்டெடுத்த வைரம் போன்றவன். நியாயமான கட்டுரைகள் நிறைந்தவன். பிறர் பிழைகளைச் செய்தால், பொறுப்ப் பின்வரும் காரியங்களை யோசியாது அப்பிழைகளை எடுத்துக்காட்டிப் பெரியோரிடத்தும் கண்டித்துப்பேசும் குணசாலி. ஆகையால், இக்குணப்பெருங்குன்று தன்னிடம் காதல்கொண்டு நிற்பவளும், அக்காதல் தோன்ற முகக் குறிப்பும் விநயமு முடையவளாய்த் தன்னெதிர் நிற்கும் இடிம்பியை வெட்டிப் பேசினன் என்பது அசம்பாவிதம் வில்லி இவன் குணத்தை மறந்தவராயும், இடிம்பியின் குணத்தைப்பற்றித் தாமே பின்னால்

> 'குந்தியை யிரவுநண் பகலுங் கோதிலா
> வந்தனை புரிதலின் மகிழிடிம் பையும்'

என்றுஉயர்த்திக் கூறியிருப்பதை எண்ணுதவராயும், ஏதோ அரக்கியாதலால் அதட்டி வார்த்தைசொன்னனென்று கூறிவிட்டார். இலக்குமணன், "யாவளடீ யுரைசெய்கடி தென்று" கடுகடுத்தது அவனுக்குப் பொருந்துமோ வெனில் அதுவும் பொருந்தாதென்றே சொல்லலாம். அவன் சூடுண்டபூனை என்பதை நாம் மறக்கலாகாது. முன்னரே இடர் செய்ய வொருத்தி தன்னண்ணனிடம் வந்திருப்பதை அவன் அறிந்தவன். மேலும் இளையவனுனபடியால் உள்ளங்கவர்ந்தெழுந் தோங்குஞ் சின வெள்ளத்தைத் தடுக்கமுடியாதவன். அன்றியும் இவன் தசரதன் இல்லையென்ற மௌலியை யான் கவிப்பேன்; தேவராயினும் மூவராயினும், வருகவென்று

முனிந்தவன். "முன்னம் புலமீந்து பின்னில்லை யென்ற மன்னன் காணெனத்தன்" தந்தையையே யிகழ்ந்து சீறினவன். ஆகையால் அவன்செயல்கள்சற்றேமன்னிக்கத் தக்கவைகளாகும். வீமன் இதற்குமுன், வாமமேகலை மங்கையரால்வருங் கேடுகளைக் கண்டறிந்தவனல்லன். ஆகையால், ஆரம்பத்திலேயே அணங்கிடத்து அவனை வணக்கமற்றவனுப்ச் செய்தது யுக்தமாய்த் தோன்றவில்லை. சூர்ப்பணகையைக் கண்டு இராமர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டால் நாம் முன் கூறியவற்றின் உண்மை விளங்கும். உன் ஊரேது என்று கேட்டபின் இராமர், 'ஒரு துணையுமின்றித் தனியளாய் நீவந்தது ஏன்?' எனவினவ, அவளும் "ஈண்டோர் காரியமுண்மை நின்னைக் காணிய வந்தே னென்றாள்." என்பால் என்ன காரியம் சொல்லென்றார் இராமர். 'தாமுறுகாமத் தன்மையை யருங்குல மகளிர் தாமே தம்வாயாற் சொல்வரோ?' என்று சூர்ப்பணகை சொல்லாதுபோல் தன் நிலையை யுணர்த்தினள். அதை யொட்டித்தான் நாம் மேற்கூறியபடி ஆசைநோய்கூறுவதற்குத் தெரிவையர்க் குளங் கூசு மென்று இடிம்பிசொன்னதாக வில்லி வரைந்ததும். பின்னர் இராமர் அவளை நீ அந்தணர் பாவையானபடியால் நாம் மன்றல் எய்துதல் இயலாதென்ன, அவளும் தன்தாய் சாலகிடங்கர் தம் தையல் எனக்கூறியும், அவ்வாறாயின் மனிதரும் அரக்கரும் பொருந்துதல் கூடாதென்று இராமரும் மறுத்தார். நெடுநேரம் இருவருக்கும் விவாதம் நிகழ்ந்தது. கடையில் இராமர் அவளை வெருட்டித் துரத்தாமல், 'இளையவன் வரின் முனிவான். ஆதலால் நீ யேகுதி கடிதின்' என் றுரைகூறித் தம்பிருப்பிடஞ் சேர்ந்தார். நெடுநேரம் வார்த்தையாடியும், தம்மனையாளையவள் பழித்துரைத்தும், தண்ணளியே அணிகலமாகக்கொண்ட இராமர் சிறிதும் வெகுண்டு வார்த்தை சொல்லவில்லை. அஃதவர் பெருமைக் கேற்றது. இறுதியில் இடிம்பியை வீமன் மணக்கப் போவதால், அவளிடம் அவனுள்ளம் நாடிச் சென்றதென்றும், அவன் அதற்கு இடங்கொடானுப்த் தன்கடமையை நினைந்து இவ்வாறு நடந்தானென்றும் புனைந்து கூறியிருந்தால் கவியின் சிறப்பு விளங்க அநேக கட்டுரைகளை அவர் கழறியிருக்கலாம். தம் மாட்சிமை தோற்றுவிக்கக் கூடிய நல்லதொரு சமயத்தை வில்லி வீணேயிழந்தார்.

நிற்க. முன் நம் தோற்றுவாயில் காவியங்களுக் கழகாவது நிறைந்த சம்பாஷணையென்று நாம் குறிப்பிட்டோம். அவ்வாறே இராமரும் சூர்ப்பணகையும் உரையாடுவது நமக்கு இனிமையைத் தருகிறது. அதன் உண்மை நாம் கீழ்க் குறிப்பாய்க் கூறியவைகளிலிருந்து நன்றாய் விளங்கும். சூர்ப்பணகைப் படலத்தை ஒரு முறை மேனேக்காய் ஓதினாலும், அது தெரியவரும். ஆனால் நமது வில்லிபுத்தூரரோ இடிம்பி வந்ததுமுதல், இடிம்பனோடு வீமன் மல்லயுத்தம் புரிதல்வரை செய்த சம்பாஷணையை ஆறே ஆறு செய்யுள்களில் அடக்கிவிட்டார். எவ்வளவுதான் சுருங்கச் சொல்லினும், இவ்விஷயத்தில் வில்லி முன்யோசனையிற் சற்றே குறைவுபட்டார் என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

மானுடமுடை வீசலால், இவர்கள் வரவறிந்து இவர்களைக் கொல்லவேண்டுமென்னும் எண்ணத்துடன் வந்த இடிம்பி பின்னம்மானிடருள் ஒருவனது ஆதரத்தையே நாடி நின்ற நிலைமையைக் கவி அழகாக வருணித்துள்ளார். அச்செய்யுள் உவமை யழகோடு வில்லிக்கியற்கையான சந்தவழகும் அமைந்திருத்தலால், அதனை இங்கே கூறுவோம் இச்சருக்கத்தின் தொடக்கத்திலிருந்து முதற் பதினைந்து செய்யுள்களும் சந்தவழகுடையனவாய் மிடுக்குடன் செருக்கிச் செல்வது இங்கே நோக்கத் தக்கது.

> "பெருஞ்சு ழிப்படக் கரைபு ரண்டெழப்
> பெருகும் யாறுபின் பிறழ்க லங்கல்போ
> யருஞ்சு வைப்படுந் தெளிவி னேடுசென்
> றாழி வேலைவா யணையு மாறெனப்
> பெருஞ்சி னத்துடன் கொன்று தின்றிடப்
> போத ருந்தொழிற் பேதை நாண்மெலிந்
> திருஞ்சி றைச்சுரும் பிசைகொண் மாலையா
> யின்ப மாலுழந் துன்னை யெய்தினேன்"

[வெள்ளத்தாற் சுழல்கொண்டு குமிழிபொங்க நீர் நிறைந்து இருகரையும் புரளச் செல்லும் பெருக்குடைய ஆற்றுநீர், மண்ணாலும் மற்றுமுள்ள பொருள் கலப்பாலும் கலங்கிச் செல்லுமேனும், பின்னால் மாறுபடத் தெளிந்து, நற்சுவை கூடிக் கடலை யடைதல்போல், கொதித்த மனத்தினனாய்ப் பொருது கொன்று தின்னவேண்டுமென்னப் போந்தனன், அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் ஒலித்து மொய்க்கும் மாலையை யுடையாய்! இப்போது இன்பநோயும் மயக்குமெய்தி யுன்னைத் தஞ்சமென் றடைந்தேன்.]

இஃது இடிம்பியின்மொழியாயின்றிக் கவிக்கூற்றாயிருந்திருப்பின் மிகவும் நன்றாயிருக்கும். 'என்காதலை நான் எவ்வாறு சொல்வேன்? என மனமுளையச்சொல்லிய அவளேதன்வாயால் தன்னேயை உவமை சிறக்கப் பரக்கக் கூறுவது சற்றேனும் ஒழுங்காயில்லை. அல்லாமலும் அவள்காதலைக்கொண்டதுபொய்யாயின் அவன் மனத்தில் ஆழ்ந்த உணர்ச்சியின்றியிருப்பின் அவ்வாறு சொல்வதும் நேரிதாகும். அவன்காதலோ அத்தகையதன்று. தாயான குந்தியும்கண்டு இரக்கங் கொள்ளத்தகுந்தபடி உள்ளன்பை வெளிப்படுத்தி நின்றது. ஆகையால்தான், இக்கவி ஆசிரியர் கூற்றாக விருந்திருக்க வேண்டுமென்றது. சுழிகொண்டு கரைபுரண்டெழும் ஆற்றுநீர்ப் பெருக்கு மனக்கலக்கத்தையும் அறிவைச் சுழற்றும் இயற்கையையுமுடைய கோபத்துக்கு நேர். கரை புரளுதல் தன்னை மறந்து பொங்கி யுரையாடல். நீர் தெளிவடைதல் கோப மடங்கல். சுவைப்படுதல் தன்காதல் விளங்குதல். தெளிவினோடு சென்று வேலைவாயணைதல், மெலிந்து உள்ளமுருகித் தலைவனையடைதல். தலைவனும், தரங்கவேலைக்கேற்பப் பெருமையும் ஆற்றலும் வாய்ந்தவன். ஆழி வேலை யென்பது ஒரு பொருட் பன்மொழியாய்ச் சிறப்பினைத் தந்ததென்றுவது, ஆழ்ந்தகாரணமே பொருளாய் ஆழமுடையவேலையென்றுவது கொள்ளினும் இழுக்காகாது.

இதுவரையில் இவ்வருடச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு இன்றுமுதல் வி. பி. அனுப்பிக்கொண்டு வருகின்றோம். தயவு செய்து தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். மானேஜர்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

அன்றும் இன்றும்.

"கலாநிலைய"த்து இரண்டாவது மலர் ஒன்பதாவது இதழ், தபால்நிலயமிருந்து எளியேன் கைப்புக்கதும், பிரித்ததும் முன்னே கண்ணிற்குப் புலனும் "பொருளடக்க"த்தைக் கண்ணுற்று வருங்கால் "சிலப்பதிகாரமும் மணிமேகலையும்" என்ற தலைப்பைக் கண்டு கழிபே ருவகையொடு அக்கட்டுரை துவக்கும் எண்ணின் பக்கம் தட்டித்திறந்தேன். தாழியினகத்தே பசும்பொன் உளதெனக் கையை நுழைக்க, ஆ! கரும்பாம்பொன்று அதனுள்ளிருந்து சீறியெழுந்ததொப்பச் "சிலப்பதிகாரமும் மணிமேகலையும்" என்ற தலைப்பைக்கண்டு அப்பக்கம் நோக்க, "ஐயம் விளைத்துள்ள ஐயம்" என்னும் ஓர் சிறு தலைப்பு அதன்கீழ் மிளிர்தல் கண்டு துணுக்குற்றேன். சென்ற ஆண்டு இறுதியிற்போந்த 'பொய்யாற் பொலிவது புலமை" யென்னுங் கட்டுரைநோக்கிய எற்குப் "புலமை பொய்யாற் பொலிவதியாங்ஙனம்? இல்லாதவற்றை இருப்பனபோற் காட்டும் அவர்தம் திறனுல் நாமுறும் நலம் யாது?" என்னும் இயல்பாய ஐயங்கள் எழலாயின. அவ் ஐயம் அன்றைய தலையங்கத்தே நம் அதிபரவர்கள் ஒழித்தனர். "யாம் கூறுவது பொய்யே! எனினும், எம் சொல்வன்மையைச் செவிமடுத் தின்புறுவாய்" என்ற பின்னர் வழக்கிற்கிடனில்லை.

இனி, யான் அன்று சிலப்பதிகாரத்திற்கு முன்னுரையாக வரைந்த சில மொழிகள் முன்னுக்குப் பின் முரணி நிற்பனவாகத் தோழர் ஸ்ரீநிவாச ராகவன் அவர்கள் தீட்டியிருக்கின்றனர். "இங்ஙனம் போற்றப்படற்குக் காரணம் அக்காலத்துள்ளவற்றை (சிலப்பதிகாரம்) மிகையும் குறையுமின்றிக் கூறிச்செல்லும் நேர்மையேயாகும்". "இச்சில சிறு உண்மை விளக்கங்களேனும் பெற்றிலேமாயின் இருள் செறிந்த அக்கால நிலைமையை யெவ்வாறு உணர்தல் கூடும்?" என யான் கூறிய இவையே தம்முள் முரணிநிற்பனவென அவர் கருதுகின்றனர். இடையிலுள்ள ஒரு வரியைச் செல்வர் சீனிவாசன் மறந்தனரோ, மறைத்தனரோ அறிகிலேன். இம்முறையே நின்றொளிர்வன சங்கநூற்களும் அவற்றோடு தொடர்புடையவும்" என்பதுவே. அது, மேனாட்டாரைப்போல் நம்முன்னோர் "நாட்டு வரலாறு" (History) எனவொன்று தனியே தீட்டிவைத்திலர். அஃது இன்றியமையாதது என அவர்கள் நினைத்திலரோஎன்னவோ! இந்நிலைமையில் நம் நாட்டின் முந்திய நிலைமையை யறிவதரிதாயினும், வறுமையாற் பரிசில்பெறப் பாடியபாடல்களும், அன்புக்கனிவால் நெஞ்சுருகிப் பாடிய பாடல்களும் சில காப்பியங்களுமே ஒளிக் கருவிகளாகவுள்ளன. சிலப்பதிகாரம் ஒன்றை மட்டும் யான் குறித்திருப்பின், "அது மிகையுங் குறையுமின்றிக் கூறுவதென எங்ஙனங் கண்டீர்?" எனவினவ இடனுண்டு. பிற சங்கநூற்களையும் குறித்திருக்கும்பொழுது மாறு கூற இடனேது? இனி ஒன்று: "புகார், கூடல், வஞ்சி இவற்றையும், இவற்றுள் நிகழ்ந்த வரலாற்றையுமா கூறுகின்றன அவை?" என அவர் மீண்டும் வினவாரென்னுந் துணிபு எற்குப் பெரிது முண்டு.

பின்னர், "இயற்கை நெறி வழாது" என்பதன் பொருள் என்ன?" என்னும் அவர் வினவிற்கு, அவரது மற்றொரு கடாவே விடை தந்து நிற்றல் வியப்பே! "கம்பனது அயோத்தியும், சேக்கிழாரின் பொத்தப்பி நாடும், உடுப்பூரும், ...தலங்களும் இயற்கைநெறிவழாது இயற்றப்பட்ட புகைப்படங்களா?" இதனுல் உள்ளத்தை உள்ளவாறே கூறுவது இயற்கை நெறியென இவர் அறிந்திருந்தும் வினவுவது ஏனோ?

இனிப் "பண்டைக்காலப் புலவர் பெருமக்கள் எவர்? இடைக்காலத்தின் துவக்கமும் முடிவும் யா?" என வினவுகின்றார். இவை குறித்துத் தாமோதரம்பிள்ளையவர்கள், மறைமலையடிகள், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தஞ்சை ஸ்ரீநிவாசப்பிள்ளை முதலிய மாண்பமைந்த பேரறிஞர்கள் விரிவாக வரைந்து வெளியிட்டிருக்கின்றனர். வி கோ. பரிதிமாற் கலைஞர் அவர்கள் தமிழ்மொழிக்கு "ஆதிகாலம், இடைக்காலம், பிற்காலம்" என மூவகைக் காலம் வகுத்து, அவற்றுள், இடைக்காலத்தை முற்பகுதி பிற்பகுதியென இரு பிரிவாக்கிச் சங்க நூற்கள் ஆதி காலத்தவென்றும், சிலப்பதிகாரம் முதலிய இடைக்காலத்தின் முற்பகுதியவென்றும், தேவாரம் திருவாய்மொழி கம்பராமாயணம் நளவெண்பா முதலிய பிற்பகுதியவென்றும், நைடதம் பாரதம் முதலிய பிற்காலத்தவென்றும் அறுதியிட்டுச் செல்கின்றார். வி. கோ. ப. அவர்களின் பிற்காலத்தையே மனத்துட்கொண்டு யான் இடைக்காலம் என வரைந்தேன். "ஏதுவாக நின்றவர் அண்மிய காலத்துப் புலவரும் தற்காலச் சிலருமே" எனும் என் உரையே அதற்குக் கரி பகரும். எனினும், வி.கோ.ப. அவர்களின்கொள்கைக்கியையக் கம்பர் சேக்கிழார் புகழேந்தி தேவார திருவாய்மொழியருளிய பெரியார் இடைக்காலத்தின் பிற்பகுதியினரென்பது புலனும்.

இனி "இப்பாவலர்தம் பாக்கள் பண்டைய பாக்களொடு எவ்வெப்படியில் தாழ்ந்து நிற்பன?" என்பது அவர் வினு. தேவார திருவாய்மொழிகட்கும், திருவருட்பாவிற்கும் மதிப்புரை கூற யான் அருகனல்லன். உண்மையில் தவறுளதெனக்கண்டு, அதனை நிலைநாட்டப் புகுந்த நக்கீரர் பட்டபாட்டை நினைப்பின் யாரே ஆண்டவனருள் கைவரப்பெற்ற அடியார்கள் அருண்மொழிக்கு மதிப்புரை கூறத்துணிவர்? இனி இலக்கிய வுலகில் தலைமைபூண்டு தனிப்பேராழியுருட்டிய கம்பர் நிலையை யறியின், அஃது ஏனையவர்க்கும் ஒக்கும். அவரைக் குறித்து ஆங்கிலத் தமிழ்ப் புலவர் திருமணம் - செல்வக்கேசவராய முதலியாரவர்கள் பின் வருமாறு கூறுகின்றார்:—

'முற்காலத்துக் கவிகட்கும் பிற்காலத்துக் கவிகட்கும் (கம்பர்) இடை நின்றவராதலால், முன்னோர்களுடைய சிறப்பும் உடையவர்; பின்னோர்களுடைய குறைபாட்டில் ஒரு கூறும் உடையவர். 'புவியினுக் கணியாய்.................சான்றோர்கவியெனக் கிடந்த கோதாவரி' எனவும்; 'கற்பகமனையவக் கவிஞர் நாட்டிய, சொற்போருளாமெனத் தோன்றல் சான்றது'எனவும் கூறிய வகையான் கம்பர் கருத்திற் கொண்ட கவி பாவம் இன்னதென அறிதலாகும்!

இனி முன்னோர் சிறப்பும் பின்னோர் குறையும் யாவென அவரே வரைகின்றார்:— "தமிழில் பழைய

தொடர்நிலைச் செய்யுள்கள் கதைப்போக்கிலே ஐந்திணைக் கருப்பொருள் உரிப்பொருள்களை உரைப்பன அல்ல. "மலை கடல் நாடு வளநகர் பருவம், முதலியவற்றைத் தனியாக வாங்கிக்கொண்டு உயர்வு நவிற்சியாற் புனைந்துரைப்பதில்லை." "முற்காலத்துக் கவிகளெல்லாம் எதுகை மோனை முதலிய பொருட் செய்யாமல் ப்ரபஞ்ச விலாசத்தை ஒட்டித் தாங்கள்கூற விரும்பும் பொருளை மாத்திரமே நன்கு கவனித்தவர்கள். பிற்காலத்துப்புலவர்கள் தாங்கள்கூற விரும்பியபொருளை யாதொரு பொருட்டுச் செய்யாது,தாங்கள் பாடுகின்ற செய்யுள்கள் யாப்பிலக்கணத்துக் கிசைந்திருக்கின்றனவா என்பதை மாத்திரமே நன்கு கவனிப்பவர்கள். புனைந்துரை வகையால் புலவர் இல்லனவும் கூறுபவெனினும், முற்காலத்துக் கவிகள் உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு, நல்லோர்க்கு உள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகல் அறமாகுமெனக் கருதி நல்லோர்க்குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறினர். பிற்காலத்துக் கவிகள், கல்லாத ஒருவனைப் பரிஷ்காரமாகக் கற்றவனென்பர்;.................... முற்காலத்துக் கவிகள் தன்மைநவிற்சியை விரும்பினவர்; பிற்காலத்துக்கவிகள் உயர்வுநவிற்சியைவிரும்புவோர். பிற்காலத்துக் காவியங்கள் தண்டியலங்காரத்திற் கூறிய காவ்ய லக்ஷணம் நன்கமையப் பெற்றவையே. ஆயினும் முற்காலத்துக் காவியங்களின் அழகும் ஆழமும் இங்கே கிடைக்கவேமாட்டா. முற்காலத்துக் கவிகள் நிறைகுடங்கள்; பிற்காலத்துக் கவிகள் குறைகுடங்கள். முற்காலத்துக் கவிகள் பொருட்சுவை நிறைந்தவர்; பிற்காலத்துக் கவிகள் சொற்சுவை நிறைந்தவர்."

தாமோதரம்பிள்ளையவர்கள் வீரசோழியப் பதிப்புரையகத்தேதமிழ்மொழியை அணங்காக்கி,"அபோத காலம்", என்பனவாக எண்வகைக் காலம் வகுத்து, அவற்றை மாதர்கட்குரிய எழுவகைப் பருவங்களோடொப்பிட்டு, இடை நின்ற சமண காலத்தை ஆரியத்தோடுறவுபூண்டு அளவளாவிப் பயின்ற காலமாகவும்; "இதிகாச காலத்"தை ஆரியத்திற் கடிமைபூண்டு தமிழணங்கு நலிவுற்ற காலமாகவும்; அதற்கடுத்த "ஆதீன காலத்"தும் அந்நலிவு களைந்தனரில்லையென்றும் அழகுபடக் கூறிச் செல்கின்றார்.

மும்மொழிப் புலமைவாய்ந்த மறைமலையடிகள்திருவுரை பின் வருவன:—"இனிப் பண்டைக் காலத்துச் செந்தமிழ்ப் புலவரெல்லாரும் உலக இயற்கைத் திறம் பிறழாமல், அதனை நுணுகி ஆராய்ந்து பாட்டுப்பாடும் மனவுறுதி மிகுதியுமுடையரா யிருந்தனர். உலக இயற்கையிற் காணப்படும் அருமை பெருமையினை மிக வியந்தனர். தம் மன நினைவிற்கு இசைந்த வண்ணம் எல்லாம் உலக இயற்கையினைத் திரித்துக் கூறாமல் அவ்வுலக இயற்கையின் அழகின் வழியே தமதறிவினைப் பொருந்தவைத்துத் தம் நினைவினை விரிவு செய்து விளக்கி வந்தனர். இம்முறைமைநற்புலவர்க்கு இன்றியமையாச் சிறப்பினதாம் என்னுங்கருத்துப்பற்றியே இரசிகர் (Ruskin) என்னும் ஆங்கிலமொழியில் உரைவல்ல ஆசிரியர் காட்டு என்ற புலவரைப்பற்றிச் சொல்லவந்தவிடத்து, 'அவர் தமதுணர்வின் வழியே உலகின் இயற்கையினை நிறுத்திக்கொள்ளாமல், அவ்வுலக இயற்கையின் வழியே தமதுணர்வை நிறுத்தி நின்றார்' என்று புகழ்ந்தெடுத்துக் கூறினர். ஆகவே, உலக இயற்கையின் வழிநின்று பாட்டுப்பாடுதலே அருமையாமென்பதும், அதுவே நல்லிசைப் புலவர்க்கு அடையாளமாமென்பதும் இதனுல் நன்கு பெறப்படும். பழந்தமிழ்ப் புலவர்களெல்லாரும் இந்நுணுக்கம் இனிதறிந்து விளங்கினர்களென்பதற்குப் பழைய தமிழ்ப் பாட்டுகளே சான்றாகும்."

இவற்றால் பண்டைக்காலப் புலவர் பெருமக்கள் எவரென்பதூஉம்இடைக்காலத்தின் துவக்கமும்முடிவும் யாவென்பதூஉம் பெறப்படுதலோடு, "பண்டைநாட் புலவரோ, அன்றி, பின்னாள் தோன்றியவரோ யாவரே கவிதையிற் பெரியர் என்னுங் கேள்வி புதிய தொன்றன்றாயினும், "இலக்கியம் படைத்த ஒவ்வொரு மொழியிலும்தோன்றிப் பின்னர் அது பயனற்றதென ஒதுக்கப்படுகின்றது" என்னும் முடிவு பிறமொழிகட் கெங்ஙனமாயினும் நம் தமிழ் மொழிக்குப் பொருந்துமாறில்லை யென்பதூஉம் வெள்ளிடைமலை. பண்டைய புலவரையும் இன்றைய புலவரையும் சீர்தூக்கி யாராய்ந்து கூறிய அப்பேருரையாளரின் செம்மொழியை யாரே இதுவரை பொய்ம்மொழியாக்கினர்? புலமையில் முன்னோரைப்போல் பின்னோர் பொலியப் போவதில்லை யென்பது என் முடிபன்று; பொலிந்ததில்லை யென்பதே யென் நினைவு.

பெ. இராமாநுஜன்

தமிழ்ப் பாடம் 63.

[நளவெண்பா.]

கலி நீங்கு காண்டம்

தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நடைபெறும் என்று அந்தணன் கூறியதைக் கேட்டு, அஃது உண்மைதான் என்று நம்பி நாளைக்கு நடக்கும் அச் சுயம்வரத்திற்குத் தான் எவ்வாறு போய்ச் சேர்வதென்று தவித்த இருதுபன்னனை நோக்கி வாகுகன், "ஏ, அரசே, சொல்லப்படுமோ இச்சொல்!" என்று வாய் பொத்துகின்றனன். அவ்வயோத்தி மன்னன் இயற்கையிலேயே சிறிது புத்திநுட்பங் குறைந்தவனுயிருத்தல் வேண்டும். குறைந்தவனு யிருந்ததுமல்லாமல், அவ்விஷயம் உலகப் பரசித்தமாகவும் இருந்திருத்தல் வேண்டும். ஆதலாற்றான், முன் சொன்னபடி தனக்கு இரண்டாம் சுயம்வரம் என்றாலும் அவன் சிறிதேனும் ஆராயாது வந்திடுவான் என்று தமயந்தி நிச்சயமாய் உணர்ந்து அதன்மேல் தன் சூழ்ச்சிகளைக் கட்டலாயினள். அவள் எண்ணியவாறே இவனும் "மற்றிதனுக்கு என் செய்கோ!" என்று பதறினன். ஆனால், வாகுகனும் அருகுநின்ற பாகனே, இஃது அசம்பாவிதம் என்பதை விளக்குகின்றனன். அதன் மேலேனும் அயோத்திமன்னன் ஆராயப் புகுந்திருக்கலாம். அவ்வந்தணனை, "வேதிய, இரண்டாம் சுயம் வரம் என்னுமிது சாஸ்திர சம்மதந்தானே! பிரிந்த

கன்ற நளன் யாது ஆயினன் என்னுஞ் செய்தி ஏதே னும் எய்தியதுண்டோ? இச்சுயம்வரம் ஆயபின் அவன் திரும்பிவந்தால் தமயந்தியின் நிலையும் அவள் இரண்டாம் மாலையிட்ட வேந்தனது நிலையும் என்ன வாம்! மற்று, விதர்ப்பவேந்தன் முடங்கல் ஏதேனும் எனக்கு நின்வயம் அனுப்பியுளானோ?" என்று வினவி யிருப்பானாயின், உண்மையை ஒருவாறு உணர்ந்திருக் கலாம். அதற்குப் பதிலாக என் செய்தான்? வாகுக னுக்குச் சமாதானஞ் சொல்லப் புகுந்தான்.

என்மே லெறிகின்ற மாலை யெழினளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னாளி—லன்னதற்குக்
காரணந்தா னீதன்றே வென்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தா னன்னான் மதித்து. 41.

புதப்பிரிவு:— என் மேல் எறிகின்ற மாலை எழில் நளன்தன் முன்னே விழுந்தது காண் முன் நாளில் அன்னதற்கு காரணம்தான் ஈது அன்றே என்றான் கடாம் சொரியும் வாரணம்தான் அன்னான் மதித்து.

பதவுரை

கடாம் - மதநீர்
சொரியும் - பொழியும்
வாரணம்தான் - யானையையே
அன்னான் - ஒத்தவனாகிய இருதுபன்னன்,
மதித்து - நன்றாக யோசித்து,
"முன் - (முதல் சுயம்வரம் நடந்த) முன்
நாளில் - நாளிலே (தமயந்தியானவள்)
என்மேல் - என் மேலே
எறிகின்ற - எறிவதற்கு வந்த
மாலை - மாலையானது
எழில் - அழகிய
நளன்தன் - நளனுக்கு
முன்னே - எதிரே
விழுந்ததுகாண் - விழுந்துவிட்டது பார்.
அன்னதற்கு - அப்படிவிழுந்ததற்கு
காரணம்தான் - காரணந்தான்
ஈது - இந்த இரண்டாம் சுயம்வரம்
அன்றே - அன்றே!"
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—இருதுபர்னனைப் "பறிபீறி நெல்லில் பருவரால் ஓடும் நெடுநாடா" என்று வாகுகன் அழை த்ததற்கு இணையாக இங்குப் புகழேந்தி, "கடாம் சொரியும் வாரணம் தான் அன்னான்" எனப் பொருத் தமுறக் கூறினர். இவ்வுன்மத்தன் என்ன சொல்கின் றானென்பது விளங்கவில்லை. சுயம்வரத்தில் மாலை யைச் சூடுவார்களேயன்றி ஒருவரும் எறியமாட்டார். தமயந்தி அப்படி இவ்விருதுபன்னனைக் குறிவைத்துச் சுயம்வரமாலையை எறிந்ததாகவும், அது குறி தவறி நளனுக்கு எதிரேபோய் விழுந்ததாகவும் இவ்வுன்மத் தன் ஏதோ இயம்புகின்றான். இயம்பியபின், "அன்ன தற்குக் காரணம் இது" என்பது பொருள் மாறுபட்ட முடையது. இப்பொழுது இரண்டாம் சுயம்வரம் வைப்பதற்குக் காரணம் முன் நாள் மாலை தவறி விழுந் தது, என்று சொல்ல நினைக்கின்ற அயோத்தி மன் னன், "இன்னதற்குக் காரணந்தான் அஃதன்றே" என்று கூறியிருத்தல் வேண்டும். இதற்குப் பதிலாக இவ்விரண்டாம் சுயம்வரத்தைக் காரணமாகவும் முதல் சுயம்வரத்தில் எறிந்தமாலை தவறி விழுந்ததைக் காரிய மாகவும் கூறுகின்றான்.

விதியின் குறும்பு சிற்சில சமயங்களில் மிகவுங் குரூ ரமாய் முடிகின்றது. அழகு செல்வம் குலம் முதலிய நலங்களில் தனக்கிணை வேந்தர் யாருமிலர் என்னு மோர் அபிப்பிராயம் இருதுபன்னனுக்கு இருந்திருக் கும். முன் நாள் ஒருமாலையுந் தமயந்தி தன்மேல்எறிய வந்ததில்லை என்பதும், இன்று வைத்த இரண்டாம் சுயம்வரம் தன்னையே குறித்துவைத்தது அன்று என் பதும் இருதுபன்னனுக்கு நன்றாகத் தெரியும். இருந் தாலும், தன்னைவிட்டு வேறு யாருக்கு அவள் மாலை யிடுவாள் எனத் துணிவு கொண்டான். ஆதலால், 'இந்தத் தேர்ப்பாகனிடத்தில் என்ன சொன்னால் என்ன?' என்ற துணிவினால் பெரியதொரு பொய் யைக் கூசாது சொல்பவனாயினான். அந்தப் பொய்யோ நளனிடத்திலேயே சொல்வதாக முடிந்தது. பிறகு இவன் நளன் என்பது தெரிய வந்ததும் மானமற்று அவன் முகத்தை மறுபடி இருதுபன்னன் எவ்வாறு பார்ப்பானோ! இந்தப் பொய் வெளியானபின் தானே தூக்குப்போட்டுக் கொள்வதே தக்கது என்று அவ னுக்குத் தோன்றும்.

எனினும், அயோத்திமன்னன் நெஞ்சால் நினைத்து இந்தப்படியும் பொய் சொல்வானோ! தன் பாகனுக்கு அவன் ஒரு காரணத்தைக் காட்டித்தான் தேரைப் பூட்டும்படி சொல்லவேண்டுமென்ற கட்டாயம் இல் லையே! ஒருகால், முன் சுயம்வரத்தில் இவ்விருதுபன்ன மன்னன் நளனுக்கு அயலே ஆதனம் அமர்ந்திருக்க லாம். அந்நளன் தமயந்தியின் கடைக்கண் பார்வை யைப் பன்முறை கவர்ந்திருப்பான். ஜார்ஜ் எலியட் என்னும் ஆங்கில நாவலாசிரியர் சொல்லும் வண்ணம், பிறர்பால் போக்கிய காதற்சாடைகளைத்தனக்கென்றே எண்ணுகின்ற மாந்தர்களுள் இருதுபன்னன் ஒருவன் போலும். (Like many another man he thought signs of love for another were signs of love towards himself.) ஆதலின், இவ்வசட்டு வேந்தன் தான் சொல்லியதே உண்மையென்று ஒரு வேளை நம்பியிருந்தாலும் இருக்கலாம். எவ்வாறாயி னும், ஓராது இவ்வுரை பகர்ந்ததால்; அவன் தன் மானத்தை அடியோடு உகுத்துவிட்டான் என்பது மாத்திரம் நிச்சயம்.

முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது. 42.

பதப்பிரிவு:- முன்னை வினையால் முடிந்ததோ மொய் குழலாள் என்னைத்தான் காண இசைந்ததோ தன் மரபுக்கு ஒவ்வாத வார்த்தை உலகத்து உரைப்பட் டது எவ்வாறு கொல்லோ இது.

பதவுரை

"முன்னை - பண்டைய
வினையால் - கருமத்தினால்
முடிந்ததோ - (இப்படிச் சொல்லுவதும்)
சம்பவித்ததோ!
(அல்லது)
மொய் - அடர்ந்த
குழலாள் - கூந்தலையுடைய தமயந்தி
என்னைத்தான் - என்னை
காண - பார்ப்பதற்கு
இசைந்ததோ - எண்ணியதினாலேயோ!
(மற்று)
தன் - தன்னுடைய
மரபுக்கு - குலத்துக்கு
ஒவ்வாத - பொருந்தாத

வார்த்தை - இரண்டாம் சுயம்வரம் என்னும்
வார்த்தையாகிய
இது - இந்தச் சொல்
உலகத்து - இவ்வுலகத்தில்
உரைப்பட்டது - வழங்குவதானது
எவ்வாறு கொல்லோ - வேறு எவ்வகையால்
விளைந்ததோ."

என்று நளன் ஒரு புறமாகச் சென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

விரிவுரை:- தமயந்தி இரண்டாம் சுயம்வரம் நாட் டியுள்ளாள் என்பதை நளன் அரைநொடிப்பொழுது கூட நிசமென்று நம்பி நினைக்கவில்லை. இப்படி ஓர் அபவாதம் உலகத்தில் ஏற்பட்டதற்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று சிந்திக்கின்றானே யல்லாது அவள் இரண்டாம் சுயம்வரம் நாட்டினாளென்று அத ற்குக் காரணம் இவன் ஆராயப்புகவில்லை. "உலகத்து இஃது உரைப்பட்டது எவ்வாறு கொல்லோ" என்று தான் அயிர்க்கின்றான். பண்டைவினையில் நளன் முழு நம்பிக்கை உடையவன் ஆகையால், இந்த விபரீதச் சொல் வழங்க நேர்ந்தது பண்டை வினையின் செயல் என முதலில் மதிக்கின்றான். பிறகு தன் மனைவியின் திவ்விய குணநலங்களோடு அவளது மதிநுட்பத்தை யும் அறிந்தவனாகையால், "என்னைத் தான் காண இசைந்ததோ" என்று உண்மையை ஊகித்துவிட் டான்.

ஒற்றைத் தனியாழித் தேரென்ன வோடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்—மற்றிதற்கே[லத்
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுர
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய். 43

பதப்பிரிவு:- ஒற்றை தனி ஆழி தேர் என்ன ஓடு வது ஓர் கொற்றம் நெடுமை தேர் கொடு வந்தேன் மற்று இதற்கே போந்து ஏறுக என்று உரைத்தான் பொம் என்று அளி முரல தீம் தேறல் வாக்கும் தார் சேய்

பதவுரை

பொம் என்று - பொம்மென்ற ஒலியோடு
அளி - வண்டுகள்
முரல - சப்திக்க
தீம் - மதுரமான
தேறல் - தேனை
வாக்கும் - சொரிகின்ற
தார் - மாலையை யணிந்த
சேய் - (முருகனைப்போன்ற) நளன்,
"ஒற்றை - ஒன்றாகிய
ஆழி - சக்கரத்தையுடைய
தனி - ஒப்பற்ற
தேர் - சூரியனது தேர்
என்ன - என்று சொல்லத் தகுந்ததாய்
ஓடுவது - ஓடக்கூடிய
ஓர் - ஒரு
கொற்றம் - வெற்றியுடைய
தேர் - தேரினை
கொடு - கொண்டு
வந்தேன் - வந்திருக்கின்றேன்.
போந்து - நீ வந்து
இதற்கு - இதனில்
ஏறுக - ஏறுவாயாக"
என்று - என்று
உரைத்தான் - (இருதுபன்னனுக்குச்)
சொன்னான்.

விரிவுரை:-எது எவ்வாறாயினும் வாகுகனா யிருந்த நளன் தன் கடமையைச் செய்யவேண்டியபடி செய்ய லாயினான்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்

கம்பர் காட்டிய செங்கதிர் வனப்பு.

இராமனையுஞ் சீதையையும் இன்னவாறு துன்புறுத் திய அவ்விரவும் விடியலாகின்றது. சூரியோதய வருணனைச் செய்யுள்கள் எண்ணிறந்தன எந்நூலிலும் காணலாம்; இந்நூலிலேயும் பிற இடங்களிற் காண லாம். எனினும், இச்சந்தர்ப்பத்தில் கம்பர் பாடிய நாலைந்து செய்யுட்களுக்கு இணை தேடல் எளியதன்று. இப்பாசுரங்களைப் பகரும் நாப் பண்ணமைந்த தண்தமிழில் பழகியதாம். இவைகளை உன்னும் மனம் வைகறை யமைதியும் செங்கதிர்ச் சோதியும் பெற்றதாகும்.

176 பக்கத் தொடர்ச்சி

ததையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண
மயனுழந்து தளரு மெல்லை
சிதையுமனத் திடருடைய செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளி னெழுகின்ற புகர்முகயா
னையினுரிவைப் போர்வை போர்த்த
உதையகிரி யெனுங்கடவு ணுதல்கிழித்த
விழியேபோ லுதயஞ் செய்தான்.

[மலரடர்ந்த மாலையணிந்த இராமன் இவ்விதம் காமமயக் கங்கொண்டு உழன்று தளர்கின்ற சமயத்தில், புதையிரு ளின் நடுவில் ஓங்கி எழுகின்ற புள்ளிகளையுடைய முகத்தை யுடைய யானையினது தோலைப் போர்வையாகப் போர்த்த சிவபிரானைப்போன்ற உதயகிரி என்னும் கடவுள் நெற்றி யைக் கிழித்துத் தோன்றும் விழியைப்போல் சிவந்த சூரி யன், செந்தாமரைமலர் தன் மனத்துயரம் நீங்கி முகமலரும் படி உதயமாயினன்]

விசையாடற் பசும்புரவிக் குரமிதிப்ப
உதயகிரி விரிந்த தூளி
பசையாக மறையவர்கைந் நறைமலரு
நிறைபுனலும் பரந்து பாய
அசையாத நெடுவரையின் முகடுதொறு
மிளங்கதிர்சென் றளைந்து வெய்யோன்
றிசையாளு மதகரியைச் சிந்தூர
மப்பியபோல் சிவந்த மாதோ.

[வேகமும் வலிமையும் உடைய சூரியனது பச்சைக் குதிரைகள் தங்கள் குளம்புகளால் மிதிப்பதனுல் உதயகிரியின் மேல் படர்ந்த புழுதியானது நனையும்படி, பிராம்மணர்கள் உதயகால பூசை செய்து தம் கைகளால் தூவும் வாசனை மலரும் நிறைந்த நீரும் பரந்து பாய, சலிக்காத பெரிய மலையின் சிகரங்களிலெல்லாம் இளங் கிரணங்கள் சென்று அளாவதால், திக்கிலிருக்கும் மதயானைக்குச் சூரியன் குங்குமம் அப்பியதுபோல் அச்சிகரங்கள் சிவந்தன.]

பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையின்
 பொருள்வயினிற் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
 கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
 மெலிவகலுங் கற்பி னர்போல்
புண்டரிக முகமலா வகமலர்ந்து
 பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம்.

[திரும்பி வருகின்ற காலம் முதலிய குறிகளைத் தமக்குச் சொல்லிப் போர்க் கருமத்திற்காகவேனும் பொருள் சம்பாதிப்பதற்காகவேனும், முன் பிரிந்துபோன வண்டு தொடர்ந்த மணமமைந்த மாலையை அணிந்த தம் உயிர் அனைய நாயகர் மணிகள்கட்டிய தேரிலேறி வரக்கண்டு மனத்தில் களி சிறக்க முகத்தில் ஒளி சிறந்து உடலின் தளர்வு தீரும் கற்புடைய மாதர்போல், அழகிய தடாகங்களெல்லாம் தாமரைகளாகிய முகம் மலர அகம் மலர்ந்து விளங்கின.]

எண்ணறிய மறையினொடு கின்னரர்க
 ளிசைபாட வுலக மேத்த
விண்ணவரு முனிவர்களும் வேதியருங்
 கரங்குவிப்ப வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கி
 னடம்புரிவா னிரவி யென்னும்
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தா
 லெனவிரிந்த கதிர்க ளெல்லாம்.

[எண்ணுவதற்கரிய வேதங்களோடு கின்னரர்கள் இசை பாடவும், உலகத்தோர் துதிக்கவும், தேவர்களும் முனிவர்களும் வேதியர்களும் வணங்கிக் கும்பிடவும், கடலென்னும் மத்தளம் முழங்கவும், ஆகாயமாகிய அரங்கில் நடனம் புரிகின்ற சூரியனெனும் நெற்றிக் கண்ணுடையவுடைய சிவபிரானது பொன்மயமான சடை அவிழ்த்து விரிந்ததைப்போல் கிரணங்களெல்லாம் விரிந்தன.]

அற்றைப்பொழுது உலகினுக்கு இத்துணை அழகோடும் அமைதியோடும் புலர்கின்றது. நறை மலரும் நிறை புனலுந் தூவிய மறையவர் கின்னரர் இசையோடு வேதத்தை இணைத்துப் பாடிக் கரங்கள்குவித்து நிற்கக் கண்ணுதல் வானவன் கனகச் சடைவிரித்தாலென்னக் கதிர்களைப் பரப்பித் தினகரன் எழுந்தனன். அங்கு அவன் எழுதலும் இராமனுந் தன் பள்ளி விட்டெழுந்தான். அதனைக் கூறுகின்ற கம்பர்,

கொல்லாழி நீத்தங்கோர் குனிவயிரச்
 சிலைதடக்கை கொண்ட கொண்டல்
எல்லாழித் தேரிரவி யிளங்கரத்தா
 லடிவருடி யனந்த நீர்ப்ப
அல்லாழிக் கரைகண்டா னுயிரவாய்
 மணிவிளக்க மழலுஞ் சேக்கைத்
தொல்லாழித் துயிலாதே துயராழி
 யிடைக்கிடந்து துயில்கின் றானே.

[ஆயிரம் வாய்களிலும் மாணிக்க விளக்கு எரியும் ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டு பாற்கடலில் துயிலாமல், சக்கராயுதத்தை விட்டு அதற்குப் பதிலாய் வளைந்த வலியமைந்த வில்லைக் கையிலேந்திய மேகம்போல், பிறவிக்குரிய துயரக்கடலின் இடைக்கிடந்து துயில்கின்ற இராமனை, ஒளியுடைய சக்கரம் வாய்ந்த தேரையுடைய சூரியன் தனது இளங்கிரணங்களால் பாதங்களைத் தடவி நித்திரையினின்று எழுப்ப, அவ்விராமனும் அவ்விரவெனுங்கடலின் கரையைக் கண்டான்.]

என எம்பிரானது பரத்துவத்தை நன்கனம் நினைப்பூட்டி இராமனைத் துயிலெழுப்பலாகின்றார். மறைகள் கறங்க வேதியர் பூசிக்க வந்தவச் செங்கதிர்ச் செல்வனே அடிவருடி அனந்தல் தீர்க்கும் மேன்மையோன் இவ்விராகவன்.

இன்னதன் பின்னர்,

ஊழிபெயர்ந் தெனக்கங்கு லொருவண்ணம்
 புடைபெயர வுறக்க நீத்த
சூழியானை யினெழுந்து தொன்னியமத்
 துறைமுடித்துச் சுருதி யன்ன
வாழிமாத வர்பணிந்து மனக்கினிய
 தம்பியொடும் வம்பின் மாலை
தாழுமா மணிமௌலித் தார்ச்சனகன்
 பெருவேள்விச் சாலை சார்ந்தான்.

[ஊழிபோல் இராமனுக்கு வளர்ந்த அவ்விரவு ஒருவண்ணம் அகல, நித்திரைவிட்டு அவன், முகபடாந்தரித்த யானையைப்போல் எழுந்து, வேதத்தின் உருவம்போல்வாளுகிய விச்வாமித்திரனைவணங்கி, மனதிற்கினிய தன் தம்பி இலக்குமணனோடும், வாசனையுடைய மாலை யசையும் இரத்தின கிரீடமும் மலர்மாலையும் அணிந்த சனகனுடைய பெரிய வேள்விச்சாலையைச் சேர்ந்தான்]

முடிச்சனகர் பெருமானு முறையாலே
 மறைவேள்வி முற்றிச் சுற்றும்
இடிக்குரலின் முரசியம்ப விந்திரன்போற்
 சந்திரன்றோய் கோயி லெய்தி
எடுத்தமணி மண்டபத்து ளெண்டவத்து
 முனிவரோடு மிருந்தான் பைந்தார்
வடித்தகுனி வரிசிலைக்கை மைந்தனுந்தம்
 பியுமருங்கி னிருப்ப மாதோ.

[கிரீடத்தைத்தரித்த அச்சனகர் வேந்தனும், முறைப்படி வேதமந்திரங்களோடு கூடிய யாகத்தைச் செய்து முடித்து, இடிமுழக்கம்போன்ற பேரிகைகள் சுற்றிலுமொலிக்க, சந்திரமண்டலத்தளவு எட்டும் தன் அரண்மனையை இந்திரன்போல் சென்றடைந்து, அங்கு உயர்த்திக்கட்டிய இரதின மண்டபத்தில், எல்லோரும் நன்கு மதிக்கின்ற தவத்தையுடைய விச்வாமித்திரனுடனே, பசிய வெற்றிமாலைசூடிய நீண்ட வளையுந்தன்மையுள்ள கட்டமைந்த வில்லையேந்திய இராமனும் அவன் தம்பியும் அயல் இருக்க, வீற்றிருந்தான்]

இவ்வாறு வீற்றிருக்கச் சனகன் விச்வாமித்திரனை வணங்கி, "இவர்கள் யாவர், உரைத்திடுமின்" என வினவ அம்முனிவனும்,

"விருந்தினர்கள் நின்னுடைய வேள்வி
 காணியவந்தார் வில்லும் காண்பார
பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வர்"

என்ற பாயிரத்தோடு, அவ்விராமன்தன் "வரலாறும் புயவலியும்" எடுத்து அடுத்தபடலத்து இருபத்தொன்பது செய்யுள்களாற் கூறுகின்றான்.

[illegible] பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினுல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபிகளே இருக்கின்றன. முந்துங்கள். விலை அணு 8.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறுது, பதம் பிரித்தும், தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் தன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்றோர் இதயம் களிக்கச் செய்ய வல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு.

கலா நிலயம், வேளாளர் தெரு, புரசைபாக்கம்; சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அராபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

The Educational Publishing Co., *Nungambakam, Madras.*

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்களை நீங்கள் - - -

- தெரிந்துகொள்ள வேண்டாமா!

கௌரவ நடத்தையும், சீக்கிரத்தில் உங்கள் காரியம் ஆக வேண்டியதையும், தகுந்த சாமான்களையும் நாடி வருவீராயின் எங்களிடம் வாருங்கள். வந்து எங்கள் வர்த்தக முறைகளையும் பொருள்களையுங் கண்டு மகிழுங்கள்.

ஒரே விலையாகப் பேரமில்லாது நாங்கள் சொல்லிவிடுவதால் உங்களுக்கு எவ்வளவு சௌகரியம் நாங்கள் செய்கிறோம் என்பதை மறவாதீர்.

கைத்திற வேலையில் தேர்ந்தவர்களால் நாங்கள் செய்து வைத்திருக்கும் வெள்ளிச் சாமான்களின் அழகை வந்து பாருங்கள். அழகொடு உபயோகமும் சேர்ந்து வீட்டிற் கையாள்வதற்கும் வெகுமதியாய்க் கொடுப்பதற்கும் தக்கவை அவை.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸுராஜ்மல் லல்லுபாய் & கோ.,

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர், பொன் வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | **134**, மோகல் தெரு, ரங்கூன். | **313**, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,

GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. | **134, Mogul Street, RANGOON.** | **313, Esplanade, MADRAS.**

வர்த்தமானம்

மானேஜர் அறிக்கை.

ஸிங்கப்பூர் பினங்கு தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருக்கும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இவ்வருடத்திய சந்தா தொகையை இன்னும் அனுப்பாதிருக்கின்றனர். அந்நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயலாதாகையால், நாங்கள் வி. பி. அனுப்புவோம் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்களோ, யாதோ! தயவு செய்து அவர்கள் உடனே சந்தாவை அனுப்பினால் நலமாம். அல்லது இப்பொழுது அனுப்ப இயலாத பக்ஷத்தில் எப்பொழுது அனுப்புவார்கள் என்பதையாகிலும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இரண்டும் செய்யாதபக்ஷத்தில் அன்னவர்க்குப் பத்திரிகை வேண்டும் வேண்டா என்பதை நாங்கள் அறிய மார்க்கமில்லை யாகையால் பத்திரிகையை நிறுத்திவைக்க நேரிடும்.

தனவணிகர் நாட்டிலிருக்கும் எமது நண்பர்களுக்குச் சென்ற ஆண்டு பைண்டு வால்யூம் தேவையாயிருக்குமாயின் அவர், விளம்பரவிலைக்குக் கோத்தமங்கலம் ஸ்ரீமான் இராமசுப்ரமணியம் செட்டியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்.

கல்கத்தாவில் ஒரு விளையாட்டு:--கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டையில் ஒரு விநோதவிளையாட்டு நடைபெற்றதாகவும், அந்த விளையாட்டில், சர்ச்லயிட்டு உபயோகப்படுத்தப்பட்டதாகவும், அவ்விளையாட்டைக் கண்டுகளிக்கத் திரளான மக்கள் வந்து கூடியதாகவும், அதனால் 36000 ரூபாய் வசூலானதாகவும் அறிகிறோம்

***

ஒருவர் கடலில் மூழ்கி யிறந்தார்:—சென்ற வியாழக்கிழமை ஒரு முகம்தியர் சென்னைக் கடலிற் குளிக்கச்சென்று உயிரிழந்தார். பிரேதம் இராயபுரம் கடற்கரையில் ஒதுக்கப்பட்டிருந்தது.

***

இரங்கூனில் மஹாத்மா காந்திக்கு மார்ச்சு மாதம் 8-ந் தேதி முனிசிபாலிடியாரால் ஓர் உபசாரபத்திரம் கொடுக்கப்பட்டது. அப்பத்திரத்தில் குறிப்பிட்ட விஷயங்களாவன:— மஹாத்மா மஹான்களுக்குளொருவர்; உண்மை, கொல்லாமை, கொடை, சமூக ஒழுக்க முன்னேற்றத்திற்காக வுழைத்தல் முதலியன மஹாத்மாஜீயினிடத்தில் அமைந்துள்ள அரும் பெருங்குணங்களாம். (உலகத்தார் போற்றும் இவ்வுத்தமக் குணங்கள் பலவும் மஹாத்மாஜீயினிடத்தில் ஒருங்கே தோற்றுகின்றன.) மஹாத்மாஜீ அவ்வுபசாரப் பத்திரத்தைப் பெற்றுப் பிறகு பர்மியர் அடைந்திருந்த தீவிர முன்னேற்றத்தையும் முனிசிபல் கவுன்சிலரின் உழைப்பைப்பற்றியும் புகழ்ந்துபேசி, தம்மைக் கௌரவித்ததற்காகத் தாம் பர்மியர் வருந்தக்கூடிய காரியம் எதையும் செய்யப்போவதில்லையென நம்புவதாகக் கூறினார்.

***

பர்மாவிலுள்ள குடிகள் மகாத்மாஜீயை வரவேற்று அவருக்குபசாரப்பத்திரமும் பல நன்கொடைகளும் அளித்து அவரைக் கௌரவித்ததாகத் தெரிகிறது. பர்மா முனிசிபாலிடியார் மஹாத்மாஜீக்கு அளித்த வுபசாரப்பத்திரமடங்கிய பெட்டியை ஏலம்போட்டபொழுது அதை இரங்கூன் முனிசிபாலிடித் தலைவர் 550 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டதாகத் தெரிகிறது.

***

மேல்நாட்டாடைகளின் தகனம்:— ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை ஜில்லா காங்கரஸ் கமிடியின் சார்பில் சென்னைக் கடற்கரையில் திலகர் கட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமிய ஒரு பெருங் கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் டாக்டர். பட்டாபி சீதாராமய்யா, திருவாளர். வி. எல். சாஸ்திரி, திருவாளர். மயிலை இரத்தினசபாபதி முதலியார், திருவாளர். சத்தியமூர்த்திஐயர், திருவாளர் கிருஷ்ணசாமி பாவலர், ஜனாப் பஷீர் அமெத்சயீத் முதலியவர்கள் நேரு ரிபோர்ட்டை ஆதரித்துப்பேசி நம்நாட்டினர் அயல்நாட்டுத் துணிகளை யணிதலை யறவேயொழிக்க வேண்டுமென்றும், அவ்வாறு ஒழிப்பது நாட்டுக்கு நனிபெரு நன்மை விளைக்கத் தகுந்ததென்றும் பல காரணங்களைக்காட்டி உபந்நியசித்தார்கள். அவர்கள்செய்த பிரேரேபணையை ஸ்ரீமதி யாமினி பூர்ன திலகம்மையார் முதலியோர் ஆதரித்துப் பேசினார்கள். பிறகு அயல்நாட்டுத் துணிகள் தீக்கிரையாக்கப்பட்டன. அதுபோது திருவாளர். நடராஜன் என்பவர், காலஞ்சென்ற பாரதியாரின் பாட்டொன்றை இனிமையாகப் பாடினார். தீ நெடுநேரமொளிவிட்டு எறிந்துகொண்டிருந்தது. பின்னர் டாக்டர் சீதாராமய்யா முடிவுரை கூற கூட்டம் இரவு 9 மணிக்குமேல் கலைவுற்றது.

***

மரணத்துடன் மனிதன் போராட்டம்: —உருஷியநாட்டு மருத்துவக்கலைஞர்கள் இறந்த மக்களையுயிர்ப்பிக்கும் முறையில் இதுபோது பெரிதும் முயன்று வருவதாகத் தெரிகிறது. அவர்கள் மாஸ்கோ நகரத்தில் 25-மணிநேரத்திற்கு முன்பு உயிர்விட்ட ஒருவனுக்குச் சில நிமிஷங்கள்வரை யுயிர்ப்பூட்டியதாக வறிகிறோம். இத்துறையில் முதன் முதலில் முயல்களும், நாய் முதலிய மிருகங்களும் இறந்தபின் அவற்றை யுயிர்ப்பிக்கச்செய்து அதில் தேர்ச்சியடைந்தபின்னரே மனிதருக்கும் உயிரளிக்க முயன்று வருகின்றார்களாம். ஒரு குழந்தை இறந்த 2மணிநேரத்திற்குப்பின் அக்குழந்தைக்குமீண்டு முயிரளிக்கப்பட்டதாம். எனினும் பத்துநாட்களுக்குப்பின் அக்குழந்தையிறந்துவிட்டதாகத்தெரிகிறது. உருஷியநாட்டு மருத்துவக்கலைஞர்கள் இன்னும் சில காலத்திலிம்முறையில் வெற்றி பெருவார்களென்பதற்குப் பலவறிகுறிகள் இப்பொழுதே காணப்படுகின்றன. இச்செய்தியை நோக்குங்கால் "தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்னும் நம்நாட்டுப் பெரும்புலவர் கூறிய பொய்யாமொழி நம் நினைவிற்கு வருகிறது.

***

மைசூரைச் சார்ந்த உல்சூரில் வைத்தியாக இருக்கின்ற டாக்டர் திருமலராவ் என்பவர், நோயுடைய ஒருத்திக்குக் குளோரபார மயக்கங்கொடுத்து இரணச்சிகிச்சை செய்கையில் அவள் கழுத்திலிருந்த ஒரு விலையுயர்ந்த அட்டிகையைக் கவர்ந்துகொண்டனர் என்னுங் குற்றத்திற்காகப் பெங்களூர் ஸ்டேஷன் மாஜிஸ்ட்ரேட்டால் ஆறுமாதக் கடுங்காவல் விதிக்கப்பட்டார்.

***

விசாகப்பட்டணத்திலுள்ள மெடிகல் காலேஜில் முதல் வருஷ மாணவராயிருக்கும் இருபத்திரண்டு வயதுள்ள P. சீதாபதிராவ் என்பவர் தன்மனைவிக்கு விஷமிட்டு அவளைக் கொன்றுவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை முடிந்திருக்கின்றது. தான் விஷம்வைக்கவில்லை என்றும் அவளே தற்கொலை புரிந்துகொண்டனள் என்றும் சீதாபதிராவ் வாதித்தார். அஸெஸர்கள் அவர் குற்றவாளியே என்று அபிப்பிராயம் கூறினர். கனம் ஸெஷன்ஸ்ஜட்ஜ் பிறகு தன் தீர்ப்பைக் கூறுவதாகச் சொல்லியிருக்கிறார்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ உள்பட:—

பைண்டு செய்யாதது
உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நம் முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறோம். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதே. இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொது மதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆரூதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறு பேறு	0	4
ஆலய வழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனும்.

இன்றே எழுதுங்கள்!

நவீன கதா புத்தக சாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

189046

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"
11, VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)